# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 4

## அழகியல்வாதத் திறனாய்வு, சமூகவியல் திறனாய்வு, ஒப்பிலக்கியத் திறனாய்வு

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

14.10.2020

# அழகியல்வாதத் திறனாய்வு

- இரசனைமுறைத் திறனாய்வு
- வெளியீட்டுமுறைத் திறனாய்வு
- உள்வட்டத் திறனாய்வு
- பகுப்புமுறைத் திறனாய்வு

இவற்றுக்கிடையே அழுத்தம் தந்து பேசுவதில் தர வேறுபாடு இருந்தாலும் இவை அனைத்தும் இறுதியில் கலையழகிற்கு முதன்மை கொடுத்துப் பேசுகின்றன.

# அழகியல்வாதத் திறனாய்வு

1. இக்காலத் திறனாய்வுப் பார்வைகள் பெரிதும் அழகியல்வாதம் சார்ந்தவையாக அமைந்திருந்தன.
2. இத்தகைய திறனாய்வுகளில் ஈடுபட்டோர் பலர் சிறுகதை, புதினம், புதுக்கவிதை ஆகிய இக்கால இலக்கியங்களை ஆக்குபவர்களாகவும் இயங்கினர், படைப்பு அனுபவத்தில் உயிர்கலந்து அழகியல் சுவையைத் தேடி அலைந்தனர்.

டி.கே. சிதம்பரநாத முதலியார், க.நா.சுப்ரமணியம், சி.சு. செல்லப்பா, செங்கட்சாமிநாதன், தருமு சிவராம் பிரமிள் ஆகியோரின் எழுத்துக்கள் கலை இலக்கியத்தின் அழகியல் கூறுகளை வலியுறுத்திப் பேசுவதில் தீவிரம் கொண்டுள்ளன.

# வ. வே. சு. ஐயர்

**வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர் (1881 – 1925)**

1. படைப்பாளி, பன்மொழி வல்லுநர், பத்திரிகை ஆசிரியர், தன் காலச் சமூகத்தின் அரசியல் இயக்கம் சார்ந்தவர்.
2. இவற்றால், திறனாய்வுக் கட்டுரைகளில் ஆழமும் நுட்பமும் அழகாய் வந்து இணைந்து விளங்குகின்றன.
3. 1921இல் பெல்லாரி சிறையில் 9 மாதங்கள் – கம்பராமாயணம் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார்.
4. 1924இல் பாலபாரதி மாத இதழில் கம்பராமாயண ரசனை என்ற தலைப்பில் நான்கு தொடர் கட்டுரை எழுதினார்.

# வ. வே. சு. ஐயர்

**வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர் (1881 – 1925)**

5. 1918இல் எழுதிய கவிதை என்ற கட்டுரையும், திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல், பாரதியின் கண்ணன் பாட்டு, எமர்சனின் தன்னம்பிக்கை மொழிபெயர்ப்பு நூல், ஆகியவற்றுக்கு எழுதிய முன்னுரைகள், மலைபடுகடாம் பற்றிய கட்டுரையும் வ.வே.சு. ஐயரின் திறனாய்வுப் புலமையின் அடையாளங்கள்.

**இவரது திறனாய்வு அளவுகோல்கள்**

ஒரு திட்டவட்டமான முறையில் சுவை, பேருணர்ச்சி ஆகிய இரண்டு தன்மைகளை அளவுகோலாகக் கொண்டு, ரசிகப் பார்வையிலே பார்த்தார். – சி.சு. செல்லப்பா

## இருவகை விவரிப்புகள்

1. பாத்திர அடிப்படை

தன்னுடைய ஆங்கில நூலில் இராமன், இலட்சுமணன், இந்திரசித்து, சீதை, வீடணன், கும்பகர்ணன் எனப் பாத்திர அடிப்படையில் விளக்கினார்.

2. ஒப்பீட்டு அடிப்படை

ஒப்பிலக்கிய ஆய்வுக்கு முன்னோடியாக கம்பராமாயணத்தை வால்மீகி, ஹோமர், வெர்நில் தாந்தே, வியாசர், மில்டன் முதலிய கவிஞர்களின் காவியங்களோடு விளங்கினர்.

**இருப்பினும் அடிப்படையில் இலக்கியம் ரசனை மிக்கதாக விளங்கவேண்டும் என்பதை வலியுறுத்தினார்.**

**இரசனை என்றால் என்ன?**

கதையின் ஓட்டத்தையும் சம்பாஷனைகளின் அமைப்பையும் ரஸிகன் இருதயத்திற்குத் திருப்தி அளிக்கும்படிப் பொருத்தமாகச் சேர்த்து வைத்து எழுதுவதே ரசனையாகும். – வ.வே.சு. ஐயர்

இதே பாதையில் இலக்கியத்தில் சுவைதான் இன்றியமையாதது என்ற கருத்தை முன்னிறுத்திய டி.கே.சி. போன்று தனிப்பாடல்களில், சொற்களில் சொக்கி இலக்கியத்தை மிட்டாய்ப் பொருளாக்கிவிடவில்லை.

அரிஸ்டாடில் முதலான மேற்கத்தியச் சிந்தனையாளர்கள் வழி நின்று காவியத்தின் முழுக்கட்டுமானம் பற்றியும் எண்ணிப்பார்க்கிறார்.

# வ. வே. சு. ஐயர்

**ஏகம் என்ற உணர்ச்சி – முழுமையையும் சாரத்தையும் வலியுறுத்துதல்**

ஓர் பெருங்காப்பியம் அநேக அவயங்கள் சேர்ந்ததாய் இருப்பினும், ஒரு ஜீவப் பிராணியைப் போல ஓர் தனிப் பிண்டமாயிருத்தல் வேண்டும்... 'ஏகம்' என்கிற உணர்ச்சி அக்காவியத்தில் தோன்ற வேண்டும். – வ.வே.சு. ஐயர்

இலக்கியத்தைத் தன் காலத்திற்கு ஏற்பச் சமூகவயப்படுத்துகிறான் திறனாய்வாளன் என்ற கருத்தையும் அவருடைய திறனாய்வுச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது.

ஏக உணர்ச்சி – இராவண வதம்தான் என்கிறார். (A)

# வ. வே. சு. ஐயர்

## படைப்புநிலைத் திறனாய்வு

கங்கை நதியைப்போன்று நிதானித்தும் வேகமெடுத்தும் இறுதியில் கடலில் கலப்பதற்கு முன்னர் பேரழகு கொண்டும் விளங்கும் தன்மையது இராமாயணம் என்று நதியின் நடையில் காவியத்தின் பொலிவையும் வேகத்தையும் காணும் வ.வே.சு. ஐயரின் திறனாய்வு டி.எஸ். எலியட் எதிர்பார்க்கும் படைப்புநிலைத் திறனாய்வு என்று அளவிடுகிறார் பஞ்சாங்கம்.

## நடப்பியல் குறித்த தீர்க்கமான முடிவு

இலக்கியம் பற்றிய பார்வையில் குறிப்பிடத்தக்கது நடப்பியல் குறித்த பார்வை. உள்ளதை உள்ளபடி வர்ணிப்பதும், போட்டோ பிடிப்பதுபோல் காட்சிப்படுத்துவதும் இதயத்தின் பேருணர்ச்சியை எழுப்பப் போதாது என்கிறார்.

## மதிப்பிட்டுத் தீர்ப்பளிக்கும் நீதிபதிக் குணம்

1. கம்பனை உலகமகாக் கவிகளிலேயே சிறந்தவர் என்பதை நிலைநாட்டத்தான் எழுதுகிறேன் என்று தெரிவித்து எழுதுகிறார்.
2. ஆழமாகவும் மிக்க்கவனமாகவும் பல ஆண்டுகள் படித்து நிதானமாக வளர்த்தெடுத்த கருத்து இது; பெறுமனே தாய்மொழிப் பற்றினால் சொல்லப்படம் வார்த்தைகள் அல்ல – வ.வே.சு.
3. அவரது திறனாய்வு முழுவதிலும் நீதிபதிக் குணத்தோடு கல்வியாளர் திறனாய்வுப் பார்வையே ஆதிக்கம் செலுத்துகிறது.

இன்றுவரைக்கும் பட்டிமன்றப் பேச்சாக வளர்ந்து பெருகியுள்ள இத்தகைய பார்வைகள்தான் திறனாய்வு என்ற பொதுப்போக்கு கல்விப்புலத்தில் நிலைகொண்டிருப்பதால் திறனாய்வு ஒற்றைப் பார்வை உடையதாக மங்கிப்போய்விட்டது. – மோ. செந்தில்குமார்

## காவிய மதிப்பீடு

1. அரிஸ்டாட்டில் கூறுவதுபோல் முடிவுக்கு அருகாமையில் உள்ள ஒரு நிகழ்ச்சியில் இருந்து தொடங்குவது காவியத்துக்கச் சிறப்பன்று என்று மறுத்துரைக்கிறார்.
2. உச்சநிலைக் காட்சிகளைக் காட்டி வாசகரை உணர்ச்சிக் கொம்பில் உட்கார வைத்துத் தொடங்கினால் சென்றுதேய்ந்து இறும் என்கிறார்.
3. இந்திய மரபுப்படி வாழ்க்கையின் பிரதிபலிப்பிலிருந்தே காட்சிகளை இயல்பாகக் காட்டிச் சென்றால் வாசகனை நிலையாகக் கைக்குள் போட்டுக்கொள்ள முடியும் எனத் தீர்ப்பளிக்கிறார்.

மாத்யூ அர்னால்டைப் பின்பற்றிய இவரது திறனாய்வு முறையை விமர்சிக்கும் க.நா.சு., தமிழ் மரபை ஒட்டித் திறனாய்வு அமையவேண்டும் என்கிறார்.

**பேருணர்ச்சி, பேரானந்தம்**

1. க.நா.சு.வை விட வ.வே.சு. ஐயர் இந்தியத் திறனாய்வு மரபில் முயற்சிசெய்து பார்த்துள்ளார்.
2. இவர் வலியுறுத்தும் சுவை தொல்காப்பியர், பரதமுனிவர் ஆகியோரால் வலியுறுத்தப்பட்ட ஒன்றுதான்.
3. பேருணர்ச்சி, பேரானந்தம் எல்லாம் இந்திய மரபிற்கு உட்பட்டவைதாம்.
4. க.நா.சு.வின் கணிப்பு மறு ஆய்வு உரியது.

**வ.வே.சு. ஐயரின் திறனாய்வுப் பார்வைகள்**

1. தீர்ப்பளிக்கும் திறனாய்வு
2. ஒப்பிட்டு ஆராயும் போக்கு
3. இரசனையை முதன்மைப்படுத்தும் குணம்
4. படைப்பு நிலைக்குத் திறனாய்வை வளர்த்தெடுக்கும் ஆற்றல்

ஆகிய தன்மைகளால் தற்காலத் திறனாய்வின் தந்தை என்று சிறப்பித்துக் காட்டுமளவிற்கு வரலாற்றில் சிறப்பிடம் பெற்று விளங்குகிறார்.

இதே பஞ்சாங்கம் தான் இந்தத் தந்தையாக்கம் பொருந்தாது என்று செல்வக்கேசவராய முதலியாரின் திறனாய்வு நெறி குறித்து உரையாடும் இடத்தில் கூறினார்.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு


அலகு 4

## அழகியல்வாதத் திறனாய்வு - 03

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

04.11.2020

# க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை



கந்தாடை நாராயணஸ்வாமி சுப்ரமண்யம் (க.நா.சு)

31.01.1912 – 18.12.1988

# க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை

அரைநூற்றாண்டு காலம் படிப்பாளியாக

படைப்பாளியாக

திறனாய்வாளராக

மொழிபெயர்ப்பாளராக

பத்திரிகை ஆசிரியராகத்

தொடர்பு அறாமல் பணியாற்றியவர் க.நா.சு.

# க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை

## விமர்சனம் குறித்த க.நா.சு.வின் பார்வை

1. விமர்சனத்தில் எனக்கு நம்பிக்கை கிடையாது
2. இலக்கிய விமர்சனம் கல்வித்துறையாக முன்னேறுவதற்காக இலக்கியத்தைத் தியாகம் செய்துவிடக்கூடாது.

இலக்கியத்தில் முழு ஈடுபாட்டோடும் திறனாய்வில் அரைகுறை மனநிலையோடும் இயங்கிவந்தார்.

# க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை

## பட்டியல் இடுபவர்

இவரது திறனாய்வுப் பார்வை ஒரு வாசகப் பார்வையாக இருப்பதால் திறனாய்வாளன் என்ற கோணத்திலிருந்து பார்க்கக்கூடிய தளத்திற்கு அவர் நகரவில்லை. இதனால் பட்டியல் இடுபவர் என்று கேலி செய்யப்பட்டார்.

ஆனாலும் தமிழ்த் திறனாய்வு வரலாற்றில் திறனாய்வியலின் இன்றியமையாமையைத் தொடர்ந்து வலியுறுத்திவந்தார்.

உலகம் தழுவிய பரந்த இலக்கிய அறிவு வாய்க்கப்பெற்றவராகத் திகழ்ந்தார்.

# க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை

## நூல்கள்

விமரிசனக் கலை, இலக்கிய விசாரம், படித்திருக்கிறீர்களா?, இலக்கியத்துக்கு ஓர் இயக்கம், கலை நுட்பங்கள், இலக்கிய வளர்ச்சி, நாவல்கலை, இந்திய இலக்கியம் – விமர்சனக் கட்டுரைகள் நிறைந்த நூல்கள்.

எல்லாக் கட்டுரைகளிலும் அடிப்படையாக அமைந்திருப்பது "இலக்கியம் இலக்கியமாக இருக்கவேண்டும்; எந்தவிதமான சிந்தாந்தத்திற்காகவும் இலக்கியத்தைத் தானம் செய்துவிடக்கூடாது" என்ற ஒரே கருத்துத்தான்.

# க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை

வேறு எதில் வேண்டுமோனாலும் சமரசம் (Compromise) பேசலாம்; இலக்கியத்தின் தரத்தில் சமரசம் பேசி முடிவுகட்டக்கூடாது.

– க.நா.சு.

## திறனாய்வுக்கான அடிப்படைகள்

வ.வே.சு. ஐயர் – தேசியப்பற்று
மறைமலையடிகள் – தமிழினப்பற்று
டி.கே.சி. – கம்பராமாயணப் பற்று
கைலாசபதி – மார்க்சியப் பற்று
க.நா.சு. – இலக்கியப்பற்று

## க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை

இலக்கியத்தளத்தில் அதன் தரம் காக்க ஒரு போர்வீரனைப் போல உயர்ந்த நிலையில் செயல்பட்டாலும் பேராசிரியர்களையும் பண்டிதர்களையும் எதிர்த்துச் செயல்பட்டதில் நேர் எதிராகச் சாதாரணத் தளத்தில் இயங்கியுள்ளார்.

கல்வியாளர்களின் திறனாய்வு குறித்த கருத்து

உலக இலக்கியம் முழுதையும் கரைத்துக் குடித்துவிட்ட கர்வம் மேலோங்க, கல்வியாளர்களை அறிவிலிகள் என்றும் அவர்களின் திறனாய்வைக் குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடுகின்ற கதை என்றும் எழுதினார்.

# க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை

வெறுப்புணர்வை விலக்கிப் பண்டிதர்களின் நடைமுறையைச் சமூகப் பொருளாதார அரசியல் பின்னணியில் அணுகியிருந்தால் மிகச்சிறந்த எதிர்நிலைத் திறனாய்வை க.நா.சு. உருவாக்கியிருக்க முடியும் – க. பஞ்சாங்கம்

தமிழில் எதிர்நிலைத் திறனாய்வு

1. குழாயடிச் சண்டைகள்
2. வம்பளப்புகள்
3. தனிமனிதத் தாக்குதல்கள்

தரம் இழந்துபோனதுக்குக் க.நா.சு.வின் பங்களிப்பும் உண்டு.

# க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை

க.நா.சு.வின் விமர்சனங்கள் எழுத்துலகில் எதிர்ப்புகளை உண்டாக்கினவே தவிர, உரிய நியாயமான பலன்களை விளைவிக்கவில்லை – வல்லிக்கண்ணன்.

க.நா.சு. ஒரு இலக்கிய சிபாரிசுக்காரர்தான் - சுந்தரராமசாமி

அபிப்பிராயம் கூறுவதையே விமர்சனமாகச் செய்தவர் என்ற பெயரெடுத்தவர்.

# க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை

கைலாசபதியால் கடுமையாகச் சாடப்பட்டவர்

1. அலட்டல் பேர்வழி
2. பஜனை
3. விவரமறியாத கற்றுக்குட்டிகள்
4. பாசிஸப்போக்கு
5. சர்வாதிகாரி
6. அசட்டுமமதை
7. மடத்துணிவு

முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்களின் வீச்சுடைய கைலாசபதியின் தனிமனிதத் தாக்குதல்கள் இவை.

# க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை

கைலாசபதியின் பார்வையில் க.நா.சு.வின் திறனாய்வு சோசலிசத்துக்கும் ஜனநாயகத்துக்கும் மனிதாபிமானத்துக்கும் எதிரான போர்முறையின் தன்மை உடையது.

இது ஒரு அரசியல் நெறிசார்ந்த குற்றச்சாட்டு என்கிறார் க. பஞ்சாங்கம்

# க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை

மொழிநடை பற்றிய சரியான பார்வையற்றவர்

உலக இலக்கியம் பலவற்றையும் தமிழில் மொழிபெயர்த்தும் சங்க இலக்கியம், குறள், சிலப்பதிகாரம் முதலிய தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் தமிழ் வளர்வதற்குத் துணைநின்ற க.நா.சு. தன்னுடைய திறனாய்வு எழுத்தில் ஆங்கிலச் சொற்களுக்கு ஆங்கில எழுத்துக்களை அப்படியே ஒலிபெயர்த்து எழுதி கலைச்சொல்லாக்கத்துக்குக் கேடு விளைவித்துவிட்டார்.

# க.நா.சு. வின் திறனாய்வுப் பார்வை

க. பஞ்சாங்கத்தின் பார்வையில் க.நா.சு.

ஒரு சாதியச் சமூகத்தில் உயர்குலப் பின்னணி அமைந்த்தால்தான் அரசியல், நிறுவனம், அமைப்பு ஆகிய எதையும் சாராமல் இளமைக்காலத்திலேயே தனக்குள் உருவான ஒரு கருத்தைச் சுற்றியே தன் மீதி வாழ்க்கையைக் கட்டிக்கொள்ளக்கூடிய ஆன்மபலம் அவருக்குக் கிடைத்தது. இந்திய அளவிலும் தன்னை நிலைநாட்ட முடிந்தது.


# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 4

## அழகியல்வாதத் திறனாய்வு - 04

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

08.11.2020



# சின்னமனூர் சுப்பிரமணியம் செல்லப்பா

29.09.1912 – 18.12.1998

## சி.சு. செல்லப்பாவின் திறனாய்வுப் பார்வை

செய்யுள் மரபும் – பண்டித மரபும் ஆட்கொண்டிருந்த தமிழ் மரபு

1. பழந்தமிழ் நூல்களைத் தேடிப் பதிப்பிப்பது
2. அவற்றுக்கு உரையெழுதி விளக்குவது
3. ஆங்கில நூல்களின் மேற்கோளோடு பாராட்டுவது

- இப்படியான வேலைப்பாடுகள் நிறைந்த தமிழ்ச்சூழலில் சிறுகதை, புதினம், வசனகவிதை, புதுக்கவிதை முதலிய புதிய படைப்பிலக்கியங்களில் ஈடுபடுவதும், அவற்றை முன்னெடுத்துச் செல்வதும் கடினமான பணிகளாக இருந்தன.

# சி.சு. செல்லப்பாவின் திறனாய்வுப் பார்வை

செய்யுள் மரபும் – பண்டித மரபும் ஆட்கொண்டிருந்த தமிழ் மரபு உரைநடையில் படைக்கப்படுவதும் இலக்கியமாக விளங்கமுடியும் என்று நிலைநாட்டுவது புதிய படைப்பாளிகளின் பெரும்பாடாக அமைந்தது.

புதிய படைப்புகளைப் பற்றிப் பேசவும் எழுதவும் நிர்பந்திக்கப்பட்டனர்.

இவைகள்தான் இக்காலத் திறனாய்வு வளர்ச்சிக்கு உரமாக அமைந்தன.

# சி.சு. செல்லப்பாவின் திறனாய்வுப் பார்வை

நவீனப் படைப்பிலக்கியச் சிந்தனை மரபுக்கு உரமானவர்

படைப்பாளி

பத்திரிகையாளர்

திறனாய்வாளர்


என பன்மைத்துவச் செயல்பாடுகளோடு உற்சாகமாக உழைத்தவர் சி.சு.செ.

தமிழில் இலக்கிய விமர்சனம்

தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது

இரண்டு நூல்களும் அவரது புலமைத் திறனுக்கு நற்சான்றுகள்.

# சி.சு. செல்லப்பாவின் திறனாய்வுப் பார்வை




திறனாய்விற்கு அதிக இடம் கொடுத்து அவர் நடத்திய “எழுத்து” பத்திரிகைதான் தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றில் அவருக்கு நிலையான இடத்தைப் பிடித்துக் கொடுத்துள்ளது.

# சி.சு. செல்லப்பாவின் திறனாய்வுப் பார்வை

## பகுப்புமுறைத் திறனாய்வு

க.நா.சு. கொடுத்த ஊக்கத்தால் திறனாய்வுத் துறையில் நுழைந்த செல்லப்பா, க.நா.சு.வின் திறனாய்வுப் போக்கையே விமர்சிக்கும் அளவுக்கு வளர்ந்தார்.

1. க.நா.சு. பின்பற்றிய அணுகுமுறை மனப்பதிவு அணுகுமுறை
2. அது இலக்கியத் திறனாய்வுக்குப் பயன்படாது

என விமர்சித்தார்.

பகுப்புமுறைத் திறனாய்வை சி.சு.செல்லப்பா பின்பற்றினார்.

# சி.சு. செல்லப்பாவின் திறனாய்வுப் பார்வை

இலக்கியம் பற்றிய அடிப்படைப் பார்வை

க.நா.சு. வை விமர்சித்தாலும் அவரது இலக்கியம் பற்றிய பார்வையையே சி.சு.செ. பின்பற்றினார்.

இலக்கியத்தில் அழகும் உருவமும் இன்றியமையாத்து என்ற கருத்தை ஒட்டியே இவரது திறனாய்வு அமைந்தது.

டி.கே.சி.யும் க.நா.சு. வும் உருவவியல் அணுகுமுறை (Formalistic Approach) உடையவர்கள். - ரசனையும் அழகியலும் இவர்களின் திறனாய்வுக்கு அடிப்படைகள்.

சி.சு.செல்லப்பாவும் இதே அணுகுமுறையைச் சேர்ந்தவர்தான். ஆனால் இவரது அடிப்படை அபிப்பிராயமாக இல்லாமல் ஆதாரம் காட்டிச் செல்வதாகும் – சி. கனகசபை

# சி.சு. செல்லப்பாவின் திறனாய்வுப் பார்வை

## திறனாய்வு வரலாற்றை எழுதுதலில் சறுக்கல்

தொல்காப்பியத்தை, உரையாசிரியர்களைப் படிக்காமலேயே அவைகளைப் பற்றி முடிவாகச் சிலவற்றைச் சொல்லி தனது குறைபாடுகளை வெளிப்படுத்தியுள்ளார். இருப்பினும் திறனாய்வு வரலாற்றை எழுத முனைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1. கு.ப.ரா. கதைகள், 2. புதுமைப்பித்தன் கதைக்கரு

இரண்டு கட்டுரைகளும் செல்லப்பாவின் வாழ்க்கை பற்றிய ஆழமான தேடல்களைப் புலப்படுத்துவன. அவர் காலத்தில் தமிழுக்கு இப்பார்வை புதியது.

# சி.சு. செல்லப்பாவின் திறனாய்வுப் பார்வை

புதுக்கவிதை குறித்த பார்வை

கோவேறு கழுதை

விஜிடபிள் பிரியாணி

யாப்பு தெரியாதவர்களின் உளறல் – இப்படி கடும் விமர்சனத்தைப் புதுக்கவிதை சந்தித்த சூழல் அது.

புதுக்கவிதை குறித்த சி.சு.செ.வின் கட்டுரைகள் அவரது கலை இலக்கியம் பற்றிய ஆழமான புரிதலையும் விவாதத் திறனையும் நாகரிகமாகக் கருத்துவேறுபாடு கொள்ளும் பண்பையும் ஆரோக்கியமான மனநிலையையும் புலப்படுத்துவன.

# சி.சு. செல்லப்பாவின் திறனாய்வுப் பார்வை

## திறனாய்வு நடை

இலக்கணப் பிழைகளும் கலைச்சொல்லாக்கப் பொறுமையின்மையும் குறைகளாக இருந்தபோதிலும் திருமணம் செல்வக்கேசவராய முதலியார் போலப் பழமொழிகளைத் திறம்படக் கையாண்டார்.

1. வடையைத் தின்பதற்குப் பதில் துளையை எண்ணுகிறவர்கள்
2. வென்னீர்ப் பானையைப் பார்த்து, கெட்டில் சிரித்ததாம் நீ கருப்பு என்று
3. யுத்தத்திலும் காதலிலும் எதுவும் நியாயமானதுதான்

# சி.சு. செல்லப்பாவின் திறனாய்வுப் பார்வை

**திறனாய்வு எல்லை**

புத்திலக்கியங்களைப் பற்றி மட்டுமே அமைந்தன.
கானி நிலத்தைத் திரும்பத் திரும்ப
உழுதுகொண்டிருக்கிறார்கள் என்ற என்னத்தை
உண்டாக்கியது.

தமிழிலக்கியம் முழுவதையும் ஒன்றாக முழுமையாகப்
பார்த்துத் திறனாய்வைச் செழுமைப்படுத்தும் போக்கு
பண்டிதர்களிடமும் இல்லை  புத்திலக்கியத்
திறனாய்வாளரிடமும் இல்லை.

## கிரகாம் கூப் (Graham Hough) கூற்று - 1

ஒரு நல்ல திறனாய்வாளர், பழைய இலக்கியங்கள் வாழுங்கால அனுபவத்தின் ஒரு பகுதியே என்பதை முதலில் தீவிரமாக உணரவேண்டும். இண்டாவதாகத் தொடர்ந்து வரும் வரலாற்று வளர்ச்சியில் ஒரு பகுதிதான் வாழுங்கால இலக்கியங்கள் என்பதையும் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும்.

# சி.சு. செல்லப்பாவின் திறனாய்வுப் பார்வை

**கிரகாம் கூப் (Graham Hough) கூற்று - 2**

பழைய இலக்கியங்கள் பற்றிய விழிப்புணர்வு இன்றி, தன் வாழுங்காலத்து இலக்கியங்களைப் பற்றி எழுதுகிற ஒருவர், வெறுமனே ஒரு பத்திரிகையாசிரியராகத்தான் விளங்க முடியும். வாழுங்கால இலக்கியம் பற்றி விழிப்புணர்வின்றி, பழங்கால இலக்கியங்களைப் பற்றி எழுதுகிற ஒருவர் வெறுமனே ஒரு கல்விநெறித் திறனாய்வாளராகத்தான் விளங்க முடியும். ஒரு வகையில் இருவருக்குமே திறனாய்வு என்பது வாழ்க்கைக்கான தொழிலாகப் போய்விடும்.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு


அலகு 4

## அழகியல்வாதத் திறனாய்வு - 05

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

11.11.2020

# வெங்கட் சாமிநாதனின் திறனாய்வுப் பார்வை



## வெங்கட் சாமிநாதன்

1933 – 2015

# வெங்கட் சாமிநாதனின் திறனாய்வுப் பார்வை

வெங்கட் சாமிநாதன் இயங்கிய  கலைப்புலங்கள்

இலக்கியம், இசை, ஓவியம், நாட்டார் கலைகள் (தெருக்கூத்து, இசைக்கலை எனப் பல தளங்களில்), நாடகம், திரைப்படம் (அக்ரகாரத்தில் கழுதை இவர் திரைக்கதை எழுதியது.)

2003 ஆம் ஆண்டுக்கான  கனடாவில் உள்ள டொரண்டோ தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கும் இயல் விருது வழங்கப்பட்டது.

தில்லியில் வாழ்ந்ததால் உலகப் பார்வையும் தமிழ்ச் சிந்தனையும் இணைந்த எழுத்தாக அவரது திறனாய்வுக் கலை வளர்ந்தது.

# வெங்கட் சாமிநாதனின் திறனாய்வுப் பார்வை

**கலைத்தத்துவம்**

க.நா.சு., சி.சு. செல்லப்பா ஆகியோரின் உருவவியல் அடிப்படையிலான எழுத்துக்களையே மேலும் தீவிரமாகக் கலைத்தத்துவம் என்ற அளவி ஆவேசமாக எழுதியவர்.

சி.சு. செல்லப்பாவின் ‘எழுத்து’ இதழ் மூலம் திறனாய்வாளர்களாக அடையாளம் பட்ட பலரில் வெங்கட் சாமிநாதனும் தருமு சிவராமும் குறிப்பிடத்தக்கவர்கள்.

# வெங்கட் சாமிநாதனின் திறனாய்வுப் பார்வை

## இலக்கியப் பக்தி

க.நா.சு. - இலக்கியப் பற்றாளர்

வெ.சா. – இலக்கியப் பக்தியாளர்

அருள் வந்தவரைப் போல பக்தி ஆட்டிப் படைத்தது. இலக்கியம் புனிதமானது; ஞான மார்க்கமுடையது; உன்னதமானது; பூரணத்துவம் உடையது; தரிசனம் நிறைந்தது – இப்படிப் பலவாறு.

"உணர்வுச் சிலிர்ப்பு நிலைக்கு ஆளாகி, இலக்கியத்தக்குக் காவிச்சாயம் ஏற்றி, கற்புநெறி காட்டுகிறார்" - வண்ணநிலவன்

# வெங்கட் சாமிநாதனின் திறனாய்வுப் பார்வை

1930 தொடங்கி இலக்கியக் கலாச்சரத்தின் மீது போர் தொடுப்பவர் போல வெறியுடன் எழுதிய கட்டுரைகளின் நூல்கள்

1. பாலையும் வாழையும்
2. ஓர் எதிர்ப்புக் குரல்
3. என் பார்வையில்
4. அன்றைய வறட்சியிலிருந்து இன்றைய முயற்சிவரை

*“என் மற்ற நண்பர்களுக்கு எரிச்சலூட்டும் அளவுக்கு, நான் வெங்கட் சாமிநாதனின் அபிப்ராயங்களை மதிக்கிறேன்.”*

- க.நா.சு

# வெங்கட் சாமிநாதனின் திறனாய்வுப் பார்வை

## இரு எல்லைகள் – கொதிநிலையின் மனநிலைகள்

### கடுமையான சாடல்கள்

இது பாலை நிலம்,
கற்றாழைதான் முளைக்கும்,
மரமண்டைகள், தமிழ்ச்சாதி
உருப்படாது, இந்த எருமை
மாடுகளுக்கு எதற்கு நீச்சல்
குளம்?, தெரியாததுகள், புரட்டல்,
உனக்குப் பெயர்
அசோகமித்திரனா?
கழைக்கூத்தாடிகள்…

### வியந்தாடுதல்

“மௌனி என்ற உன்னத நிகழ்ச்சி
விவரிக்க முடியாத ஒன்று.”
“உ.வே.சாமிநாதய்யரைப் பற்றி
நினைக்கும்போது, எத்தகைய
ஒரு உன்னத நிகழ்ச்சி இந்தச்
சமுதாயத்தில் நடமாடிவிட்டு
மறைந்துவிட்டது என்பது,
பிரமிப்பையும் மலைப்பையும்
தருகிறது.”

# வெங்கட் சாமிநாதனின் திறனாய்வுப் பார்வை

## திறனாய்வுக் கோட்பாடுகளை உருவாக்கத் தவறினார்

குழு வாதம்,
சிறுபத்திரிகை வட்டாரத்தில்
பரபரப்பை ஏற்படுத்துதல்,
தன் கருத்துக்களைப் பற்றிய
அதீத மதிப்பீடு,
எதிர்க்கருத்துக்களைத்
தனிமனித நிலையில்
அணுகுதல்.

கருத்து, விவாதம், அலசல்,
புரிதல், விவரம் அறிதல்
முதலியன ஓர் உயர்ந்த
தளத்திலும் அவற்றை
மொழிப்படுத்தும் விதம்
தெருச்சண்டை
நிலையிலும்
வெளிப்பட்டது.

# வெங்கட் சாமிநாதனின் திறனாய்வுப் பார்வை

## அஞ்ஞானம்

ஞானத்தினால் அழைப்பு விடுவதற்குப் பதிலாக அந்த ஞானத்தைத் தன் முனைப்பின் சிகரத்தில் நின்று சத்தம் போடப் பயன்படுத்தியிருக்கிறார்

ஓவியம், நாடகம், கூத்து, திரைப்படம், இசை, இலக்கியம் எனப் பல்துறை அறிவுடையவர்.

ஆனாலும் தமிழ்த் திறனாய்வு வரலாற்றில் இவரது எழுத்துகள் அக்கப்போர்களாக இடம்பெற்றுள்ளார். - வல்லிக்கண்ணன்

# வெங்கட் சாமிநாதனின் திறனாய்வுப் பார்வை

## திறனாய்வு அடிப்படைகள்

1. படைப்பிற்கும் படைப்பாளிக்குமுள்ள உறவு பற்றியது.
2. படைப்பிற்கும் திறனாய்வாளனுக்கும் உள்ள உறவு பற்றியது.
3. படைப்பாளியின் வாழ்க்கையும் எழுத்தும் முரண்படலாகாது.

படைப்பை அணுகுகிற திறனாய்வாளனும் ஆத்மீகபூர்வமாக இயங்கவேண்டும் என்று எதிர்பார்த்தார்.

# வெங்கட் சாமிநாதனின் திறனாய்வுப் பார்வை

## படைப்பாளனும் படைப்பும்

சிறுபான்மையினர் x பெரும்பான்மையினர் என்ற கருத்தாக்கத்தை உள்வட்டம் x வெளிவட்டம் என்ற பெயரில் விரிவாக வளர்த்தெடுத்தார்.

1. கலைஞனையும் வெறும் தொழில் வல்லுன்னையும் இனம்பிரித்துக் காணவேண்டும்.
2. கதை பின்னும் தொழில்த் திறமையாலேயே ஒருவன் கலைஞனாகிவிட முடியாது
3. கலைஞனாவது என்பது சத்தியத்தாகம், முரண்படா வாழ்வு, தரிசனம் முதலியவற்றால் முழுமையடைவதாகும்.

# வெங்கட் சாமிநாதனின் திறனாய்வுப் பார்வை

## வெ.சா.வின் திறனாய்வு குறித்த மதிப்பீடுகள்

தமிழ்க் கலை இலக்கிய உலகில் பல வினாக்களின் மூலம் சலசலப்பை ஏற்படுத்தித் தீவிரத்தன்மை நோக்கித் தமிழ்ச் சூழலை ஓரளவிற்கு நகர்த்தியவர் என்ற பெருமை அவருக்கு உண்டு. – க. பஞ்சாங்கம்

சாமிநாதனது பேனா வரிகள் "புலிக்கு தன் காடு பிற காடு வித்தியாசம் கிடையாது" என்றபடி சகலத்தையும் பதம் பார்க்கும் .

- சி. சு. செல்லப்பா

எந்த மேல் நாட்டு விமரிசன பாணியையும் கைக் கொள்ளாமல் தன் சுவைக்கு உட்பட்டதை, படைப்பின் கலாச்சாரப் பின்னணியோடு பார்க்கும் தனி ரகம், இவரது விமரிசனம்.

- கோமல் சுவாமிநாதன்


# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 4

## அழகியல்வாதத் திறனாய்வு - 06

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

15.11.2020



# தருமு சிவராம் - பிரமிள்

1939 – 1997

# தருமு சிவராம் – பிரமிள் திறனாய்வுப் பார்வை

தமது இருபதாவது வயதில், சென்னையிலிருந்து வெளிவந்த எழுத்து பத்திரிகையில் கவிதைகளும் விமர்சனங்களும் எழுத ஆரம்பித்தார்.

புதுக் கவிதை, விமர்சனம், சிறுகதை, நாடகம் போன்றவற்றில் இவரது படைப்பாற்றல் ஓர் உயர்ந்தபட்சத்தை எட்டியிருக்கிறது. ஓவியம், களிமண் சிற்பங்கள் செய்வதிலும் திறமை படைத்திருந்தார்; இவரது ஆன்மீக ஈடுபாடு, இலக்கிய ஈடுபாட்டுக்கும் மேலானதாக இருந்து வந்திருக்கிறது. 'படிமக் கவிஞர்' என்றும் 'ஆன்மீகக் கவிஞர்' என்றும் சிறப்பிக்கப்பட்ட இவரது கவித்துவம், இரண்டாயிரமாண்டுத் தமிழ்க் கவிதை வரலாற்றில் தனித்துயர்ந்து நிற்பதாகும்.

# தருமு சிவராம் – பிரமிள் திறனாய்வுப் பார்வை

ஓவியம், சிற்பம், நாடகம், மொழியாக்கம், விமர்சனக்கட்டுரைகள் என விரிந்த தளங்களில் இயங்கிய பிரமிள், நவீன தமிழ் இலக்கியம் குறித்துக் கூர்மையான விமர்சனமும் அவதானிப்பும் கொண்டவர்.

தமிழின் மாமேதை என்று தி.ஜானகிராமனாலும், உரைநடையின் அதிகபட்ச சாத்தியத்தை நிறைவேற்றியவர் என்று சி.சு.செல்லப்பாவாலும் பாராட்டப்பட்டவர் பிரமிள்.

தொடக்கத்தில் எழுத்து- இதழும் இடையில் கொல்லிப்பாவை இதழும் இறுதியில் லயம் பத்திரிகையும் இவருக்கு முதன்மையான படைப்புக் களம் அமைத்துத் தந்தன. பிரமிளின் பெரும்பாலான நூல்கள் லயம் வெளியீடுகளாகவே பிரசுரம் பெற்றன.

## ஆன்மிக மையம்

சிறுபத்திரிகைச் சூழலில் ஆன்மிக மையமாகத் திகழ்ந்த தருமு சிவராம், "ஆன்மீகக் கேந்திரம்தான் எனது தார்மீகத்தின் ஊற்றுக்கண்" என்று அறிவித்தவர்.

எழுத்துலகில்,

கிறுக்கன், குரங்கு, சண்டைக் கட்டுரை (அ) வசவுக்கட்டுரை எழுதுபவன், வெறியன் – பலவாறாகக் குற்றம் சாட்டப்பட்டவர்.

## எழுத்துச் சாதனை

தமிழிலக்கிய உலகில் பலரிடமும் காணக் கிடைக்காத ஆழமும் நுட்பமும் தனித்துவமும் சிந்தனை வேகமும் நிறைந்த எழுத்துக்குச் சொந்தக்காரர்.

1. மனிதநேயம் சார்ந்த அழகியல்
2. தார்மீக உணர்வுகள்
3. கட்சிகட்டிக்கொண்டு செய்லபடுபவர்களிடம் சமரசம் கொள்ளாமை
4. தனியாக இயக்கம் கொண்டு எழுத்தில் சாதனைகளைக் காட்டியவர்.

# தருமு சிவராம் – பிரமிள் திறனாய்வுப் பார்வை

## குழுவாத எதிர்ப்பு

குழு, தங்கள் குழுவைச் சார்ந்த தனிமனிதர்களின் முன்னேற்றத்திற்காகவே சுயநலத்துடன் செயல்படுவதைக் கண்டு சிவராம் வெடிக்கிறார்.

## கலை வடிவம்

தான் கற்ற புத்தமத, இந்துமதச் சிந்தனைகளும் மேலைநாட்டுத் தத்துவச் சிந்தனைகளும் தன் வாழுங்கால ஞானிகளிடம் கற்ற அறிவும் அவருடைய திறனாய்வு எழுத்தைக் கலைவடிவம் என்று கூறும் அளவுக்கு வளர்கிறது.

- பஞ்சாங்கம்

## கவிதை

அவரது கட்டுரைகள் உரைநடையின் அதிகபட்ச சாத்தியத்தை உணர்த்தியவை – சி.சு. செல்லப்பா

“சிருஷ்டி முழுவதிலும் ஊறி, அதை இயக்கும் சக்திக்கு மறு பெயர்தான் கவிதை. கவிஞனுடைய வேலை, இந்தச் சக்திக்குத் தன்னை ஊற்றுக் கண்ணாகத் திறந்துகொள்வதுதான். இயற்கை என்ற ஒளியை விசிறும் மின்சாரம்தான் கவிதை. அந்த மின்சாரத்தை இயற்கையாகவே கவிஞன் உணர்கிறான். அவனை அவனது பாஷை மூலம் நாம் உணருகிறோம். ஆகவே, பாஷைத் தகட்டைச் செப்புக் கம்பியாக நீட்டி, தன் ஆத்மாவினுள் கரைந்த கவிதையைப் பாய்ச்சுகிறான். நம்மூடேயும் அக்கவிதை பாய்ந்து மனதில் ஒளியாகப் பூக்கிறது.” – தருமு சிவராம்

# தருமு சிவராம் – பிரமிள் திறனாய்வுப் பார்வை

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின்
வாழ்வை
எழுதிச்செல்கிறது.

- தருமு சிவராம்

# தருமு சிவராம் – பிரமிள் திறனாய்வுப் பார்வை

"கொல்வதைவிடக் கொல்லப்படுவதையே தேர்ந்துகொள்வேன்" - பிரமிள்

எதிர்நிலைத் திறனாய்வாளர்

"விமர்சனத்தின் பாதையில் பதியும் சுவடுகள் எதிர்ப்புச் சுவடுகளாக இருக்கும்பட்சத்தில்தான் சிந்தனாவாதியும் படைப்பாளியும் விழிப்புடன் நடமாடுவார்கள். சமூகமும் தனது மூளை போன்று இயங்கும் பகுத்தறிவியக்கத்தைப் பேணி நடந்துகொள்ளும்" – தருமு அரூப் சிவராம்

எதிர்நிலைத் திறனாய்வாளரக அவர் இயங்கும் முறை அவரது ஆன்மிக பலத்தின்மேல் ஐயம் கொள்ள வைக்கிறது. - பஞ்சாங்கம்

# தருமு சிவராம் – பிரமிள் திறனாய்வுப் பார்வை

## தரக்குறைவு

தரக்குறைவானவர்கள் சாதிய – வர்க்க அடிப்படையில் தரமானவர்களாக – மேதாவிகளாகக் காட்டும் போக்கு இங்கே செல்வாக்குடன் இயங்குகிறது என்று நம்பினார்.

அதற்கு எதிரான அவரது போர்முறைகள் தனிமனிதத் தாக்குதல்களாகத் தாழ்ந்து கிடக்கின்றன; மனிதாபிமானம் அற்றதாக மாசுற்றுக் கிடக்கிறது. – க. பஞ்சாங்கம்.

அந்த அளவுக்கு நான் அறையப்படுகிறேன்; அமுக்கப்படுகிறேன்; அதனால்தான் நானும் அப்படி இயங்கவேண்டியிருக்கிறது - பிரமிள்

# தருமு சிவராம் – பிரமிள் திறனாய்வுப் பார்வை

"மனத்தூய்மையே – மனச்சாட்சியே – இலக்கியச் சித்தாந்தம்"

- பிரமிள்

1. இதற்கு நேர் மாறாக எதிர்நிலைத் திறனாய்வில் கழுத்தறுக்கப்பட்ட மனச்சாட்சியின் குரலாக ஒலிக்கிறார்.
2. தான் என்கிற ஆணவம் – ஒருபக்கம், அறிவைத் திரட்டப் பயன்படுகிறது. மற்றொருபக்கம், விரல் வீக்கம் போல் சமநிலையைப் பாதித்துப் பாதகம் செய்துவிடுகிறது.
3. இந்தத் தான் என்ற மோகத்திற்கு மூக்கணாங்கயிறு போட்டிருப்பாரானால் அரூப் சிவராமின் எழுத்துக்கள் தமிழில் திறனாய்வு இலக்கியத்தை மிக உன்னதமாக உருவாக்கியிருக்கும்.

- க. பஞ்சாங்கம்.

# தருமு சிவராம் – பிரமிள் திறனாய்வுப் பார்வை

## அழகோடு சமூகப் பிரக்ஞையும் இணைந்த பார்வை

க.நா.சு., வெங்கட் சாமிநாதன் ஆகியோரிடம் காணமுடியாத ஒருவிதமான தீவிரப்பட்ட சமூக அக்கறை இவரிடம் காணப்படுகிறது.

மௌனி, சுந்தர ராமசாமி ஆகியோரிடம் நவீன சநாதனம் வெளிப்படுவதாகக் கூறும் பிரமிளிடமும் சநாதனக் கருத்துக்கள்தான் வெளிப்படுகின்றன – அ. மார்க்ஸ்

# தருமு சிவராம் – பிரமிள் திறனாய்வுப் பார்வை

ஜே.ஜே. சில குறிப்புகள் –
நாவலின் மறைமுக நோக்கம்
சநாதன வாதம் – பிரமிள்.

சுய வெறுப்பினால் கூறுவது.
– க. பஞ்சாங்கம்

அ. மார்க்ஸின் பார்வைக்கு சுய வெறுப்பு காரணமல்ல, மாறாக கொள்கை வேறுபாடாக இருக்கலாம். – க. பஞ்சாங்கம்.

பிரமிளிடம் சநாதனத்தையும் தாண்டிய ஒரு தீவிர நிலைப்பாடு இயங்குவதைப் பார்க்க முடிகிறது. அதனால்தான் அவரது திறனாய்வு படைப்பு நிலையை அடைகிறது. - பஞ்சாங்கம்

# தருமு சிவராம் – பிரமிள் திறனாய்வுப் பார்வை

சிவராம் மேற்கொண்டிருப்பது ஒரு ஆன்மிகத் தேடல்

– கோவை ஞானி.

பிரமிளின் இலக்கியத் திறனாய்வு தத்துவத் தேடலோடு நெருங்கிய தொடர்புடையது. அதுவே அவரது திறனாய்வின் அடிக்கருத்து.

கல்வியாளர்கள் போலத் தங்கள் கட்சிக் கொள்கைக்கு ஏற்ப இலக்கியத்தை வெட்டி ஒட்டித் தைத்துக் காட்டவில்லை.

கலை இலக்கியங்களே அதீத உத்வேக உணர்வின் விளைச்சல்தான் என நம்பும் பிரமிள், தனது எழுத்திலும் அதை வெளிப்படுத்தி உள்ளார். – க. பஞ்சாங்கம்

# தருமு சிவராம் – பிரமிள் திறனாய்வுப் பார்வை

## திறனாய்வுப் புலமைக்குச் சான்றான கட்டுரைகள்

புதிய கவிதை,
புதுப்பாதை – புதுக்கவிஞன்,
கவிதைக் கோட்பாடும் பாரதி கலையும்,
படைப்பாளி இயக்கம்.

## வசவுக்குச் சான்றான கட்டுரைகள்

விமரிசன ஊழல்கள்,
மஞ்சள் கருத்தும் விமர்சன உலகும்.

இலக்கிய உலகிற்குள் இயங்கும் அருவருக்கத்தக்க அரசியல் மனநிலைகளை அறிந்துகொள்ளப் பயன்படுபவை.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு


அலகு 4

## அழகியல்வாதத் திறனாய்வு - 07

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

18.11.2020

# பாரதியின் இலக்கியக் கோட்பாடு



## பாரதியார்

1882 – 1921

# பாரதியின் இலக்கியக் கோட்பாடு

*தெளிவுறவே அறிந்திடுதல்*
*தெளிவு தர மொழிந்திடுதல்*
*சிந்திப்பார்க்கே களிவளர உள்ளத்தில்*
*ஆனந்தக் கனவு பல காட்டல்*
*கண்ணீர்த்துளி வர உள்ளுருகுதல்*

கவிதையில் உணர்ச்சிக்கோட்பாடுதான்- கற்பனாவாதக் காலத்துக் கோட்பாடுதான் - இலக்கியம் பற்றிய பாரதியின் அடிக்கருத்து.

பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்

- இலக்கியத்தின் சமூகப் பயன்.

சக்தியின் அருளால்தான் கவிதை ஊற்றெடுக்கிறது.

- இந்திய மரபைப் பின்பற்றுதல்.

# பாரதியின் இலக்கியக் கோட்பாடு

எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், எளிய சொற்கள், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு ஆகியவற்றோடு காவியத்துக்கு உள்ள நயங்கள் குறைவுபடாமல் இலக்கியம் படைக்கவேண்டும். - இலக்கியத்தைச் சனநாயகப் படுத்தும் செயல்.

கம்பன், வள்ளுவன், இளங்கோவடிகளைப் பேசும் பாரதி இராஜமய்யரையும் பேசுகிறார்.

பெண்ணின் பெருமை பேசும்போது ஔவையாரையும், பகவத்கீதை உரைக்கு முன்னுரை எழுதும்போது சப்பானியக் கவிதை குறித்தும் பேசித் தன் திறனாய்வுப் புலமையை வெளிப்படுத்துகிறார்.

பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா – கவிதை குறித்த கற்பனாவாதச் சிந்தனை கொண்டிருந்தார்.

# கு.ப.ரா., பு.பி. - சிந்தனைகள்



## கு.ப. ரா.

லட்சியவாத விமர்சகர்.

கற்பனாவாதம், செவ்வியல்வாதம், நடப்பியல்வாதம் முதலிய மேலைநாட்டு இலக்கியப் பார்வைகளைச் சுட்டிக்காட்டியவர்

– சி.சு.செல்லப்பா



## புதுமைப்பித்தன்

அபிப்பிராயம் என்ற அளவில் சில திறனாய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

புதுமைப்பித்தனின் கட்டுரைகள் தொகுப்பு அவரது இலக்கியம் பற்றிய ஆழமான பார்வைகளை விளக்குகிறது.

பெ.கோ. சுந்தரராஜன், சோ. சிவபாத சுந்தரம்

1. தமிழ் நாவல் – நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்
2. தமிழில் சிறுகதை – வரலாறும் வளர்ச்சியும்

இக்கால இலக்கிய ஆய்வுக்கு வரலாற்றத் தரவுகளைக் கொடுக்க்க்கூடிய நூல்கள்.

சுந்தரராமசாமி

*சுந்தர்ராமசாமி கட்டுரைகள் நூல்* – இலக்கியத்தில் சுரணையுனர்வு, ரசனை, உள்ளொளி, தரிசனம், மனோதத்துவம், பொறி ஆகிய குரல்களே சுந்தர்ராமசாமியிடம் ஒலிக்கின்றன.
அனுபவ விவரிப்பாக அமைந்த இவரது கட்டுரைகளைப் பாட்டியம்மாள் விமர்சனங்களாகச் சாரு நிவேதிதா கருதுகிறார்.

# அழகியல்வாதத் திறனாய்வின் தெளிவுகள்

1. இலக்கியத்தில் வடிவத்தை வலியுறுத்தி இலக்கிய அழகை உருவாக்க முயன்ற இத்திறனாய்வாளர்களால் இலக்கியம், கவிதை, கலை ஆகியன வாழ்க்கை போல ஆழமான, மர்மமான தேடத்தேடச் சிக்கல் குணம் மிக்கவை என்ற புரிதல் மேலோங்கியது.
2. படைப்பிலும் வாசிப்பிலும் பல தளங்கள் இருப்பதை உணர்த்த முடிந்தது.

சங்க இலக்கியம், திருக்குறள், கம்பராமாயணம் ஆகியவற்றில் உள்ள அனைத்துப் பாடல்களும் கவித்துவம் நிறைந்தவை அல்ல என்று துணிந்தார்கள்.

# அழகியல்வாதத் திறனாய்வின் தெளிவுகள்

கலை, இலக்கியம் வாழ்க்கையின் ஒரு கூறு என்ற பார்வை தலைகீழாகப் புரட்டப்பட்டு இறைவனுக்காகத்தான் இந்த அற்ப வாழ்க்கை என்று மதவாதிகள் கூறுவதுபோல் இலக்கிய ஆக்கத்துக்காகத்தான் வாழ்க்கையே என்ற நிலைப்பாடு தொனிப்பதைக் காணமுடிகிறது.

எதையும் செய்யுங்கள் ஆனால் அதை இலக்கியமாகச் செய்யுங்கள் என்று கசடதபற இதழ் பிரடகனம் செய்தது.

அழகியல்வாத்த் திறனாய்வு நோக்கில் செய்ல்பட்ட இதழ்கள் மணிக்கொடி, ராமபாணம், சூறாவளி, இலக்கியவட்டம், எழுத்து, கிராம ஊழியன், அஃ, கசடதபற, ஞானரதம், கணையாழி, தீபம், அன்னம்விடுதூது, லயம், திசை நான்கு ஆகியன.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 4

## சமூக இயல் திறனாய்வு 01

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

18.11.2020

# சமூக இயல் திறனாய்வு

பலவிதமான போக்குகளை மொத்தமாகக் குறிக்கப் பயன்படும் சொல்லாட்சி

1. சமூகத் திறனாய்வு
2. சமூகவியல் திறனாய்வு
3. மார்க்சியத் திறனாய்வு

இந்த மூன்றுவகைப் போக்கையும் இனம் பிரித்துக் காண்பது நல்லது.

சமூகத் திறனாய்வு (Social Criticism)

ஒரு சமூகத்தின் பண்பாடு, கருத்து, பழக்கவழக்கம் முதலியவற்றை வரலாற்றுப் பின்னணியில் ஏதாவது ஒரு முறையில் இலக்கியத்தை விளக்குவது.

# சமூக இயல் திறனாய்வு

சமூகத் திறனாய்வு (Social Criticism)

சாமி சிதம்பரனார், வையாபுரிப்பிள்ளை, பொ. திருகூடசுந்தரம், ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், தெ.பொ. மீனாட்சிசுந்தரம் ஆகியோரின் எழுத்துக்கள்.

சிலப்பதிகாரம் காட்டும் திருமண முறைகள்
புறநானூறு காட்டும் தமிழர் போர்முறைகள்
முதலான தலைப்புகளில் செய்யப்படும் கல்வியாளர்களின் திறனாய்வு இவ்வகைப்பட்டவை.

# சமூக இயல் திறனாய்வு

## சமூவியல் திறனாய்வு (Sociological Criticism)

சமூகவியல் என்ற புதிய சமூக விஞ்ஞானத்துறையின் அட்டவணை, புள்ளிவிவரம், பரிசோதனை, வரைபடம் முதலிய அறிவியல் உத்தி முறைகளைப் பின்பற்றியும் இத்துறையில் ஆய்ந்தறிந்து கண்ட சமூக உண்மைகளைப் பயன்படுத்தியும் இலக்கியத்தை விளக்குவது.

இத்திறனாய்வு முறை பெரிதாகத் தமிழ்த் திறனாய்வில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பிறதுறை அறிவைத் தமிழ் இலக்கியத்துறையினர் பெறுவதற்கான சூழலும் பிறதுறையில் இருப்பவர்கள் தமிழினம், தமிழிலக்கியம், தமிழ்நாடு, தமிழ்க் கருத்துலகம் பற்றிய அறிவைப் பெறுவதற்கான சூழலும் தீவிரமாக உருவாக்கப்படவில்லை.

ஜெயகாந்தன் நாவலில் பெண்கள், ஜானகிராமனின் நாவல்களில் ஆண் பெண் உறவு, தமிழ் நாவல்கள் – சமூகவியல் பார்வை இப்படிச் சில முயற்சிகள் நடந்துள்ளன.

# சமூக இயல் திறனாய்வு

## மார்க்சியத் திறனாய்வு

மார்க்சியம் என்ற பொதுவுடைமைத் தத்துவ அடிப்படையிலும் மார்க்சிய அழகியல் நெறிமுறைகளின் அடிப்படையிலும் கலை, இலக்கியங்களின் தோற்றம், வளர்ச்சி, பயன்பாடு முதலியன பற்றியும், கலையுள்ளம் பற்றியும், இலக்கிய அழகியல் பற்றியும் விளக்குவது ஆகும்.

இவ்வகைத் திறனாய்வு தமிழ் இலக்கியச் சூழலில் பெரும் சக்தியாக உருக்கொண்டுள்ளது.

இம்மூவகை அணுகுமுறைகளிலும் இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள உறவு அடிப்படையாக அமைகின்றது.

இத்திறனாய்வு மேலும், வரலாற்றுமுறைத் திறனாய்வு (Historical Criticism), சுயவலாற்றுமுறைத் திறனாய்வு (Autobiographical Criticism) ஆகியனவும் அடங்கும்.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 4

## சமூகவியல் திறனாய்வு 02


முனைவர் மோ. செந்தில்குமார்

தமிழ்த்துறை


22.11.2020

# சமூகவியல் திறனாய்வு

1. 1925 இல் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி தோற்றுவிப்பதற்கு முன்பாகவே இந்தியாவில் தொழிலாளர் வர்க்கம் என்ற ஒன்று தோன்றிவிட்டது.

2. பாரதியார் தொடங்கி தமிழ்க் கலை இலக்கியக் களத்தில் ரஷ்ய புரட்சியின் செல்வாக்கு மேலோங்கியது.

3. திருவிக., எம். சிங்காரவேலு, பெரியார், ஜீவானந்தம், பாரதிதாசன் முதலானோர் பொதுவுடைமைச் சிந்தனைகளைத் தமிழ் மண்ணில் விதைத்தனர்.

4. அ. நடராசன், வெ. சாமிநாத சர்மா ஆகியோரின் நூல்களும் மார்க்சியச் சிந்தனை வளர்ச்சிக்குத் துணை செய்தன.

5. விடுதலைக்குப் பிறகு இந்தியா- சோவியத் நட்புறவு ரஷ்ய இலக்கியங்களின் வருகைக்குப் பெரும்பங்காற்றியது. முன்னேற்றம் பதிப்பகம்.

# சமூகவியல் திறனாய்வு


1. இந்திய சோவியத் யூனியன் தொடர்பால் உலகப்புகழ்பெற்ற ரஷ்ய இலக்கியங்கள் தமிழ் மண்ணுக்கு வந்தன. கார்க்சி, டால்ஸ்டாய், தாஸ்தயோவ்ஸ்கி எனப்பல ரஷ்யப் படைப்பாளர்கள் தமிழுக்கு நெருக்கமானார்கள்.

2. தமிழ் இலக்கியத்திலும் திறனாய்விலும் மார்க்சிய அழகியல் பெரும் செல்வாக்குடன் விளங்கத் தொடங்கியது.

மார்க்சியத் திறனாய்வில் பெரிதும் ஈடுபாட்டுடன் செயல்பட்டவர்கள்

ப. ஜீவானந்தம், சிதம்பர ரகுநாதன், ஆர்.கே. கண்ணன், எஸ். இராமகிருஷ்ணன், சி. கனகசபாபதி, நா. வானமாமலை, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, கோ. கேசவன், தி.சு. நடராசன், தோத்தாரி, ஆ. சிவசுப்பிரமணியன், எம்.ஏ. நுஃமான், தமிழவன், ஞானி, எஸ்.வி. ராஜதுரை, அ. மார்க்ஸ், ராஜ்கௌதமன் இப்படிப் பலர்.

# ப. ஜீவானந்தம்



ப. ஜீவானந்தம் – சோசலிச எதார்த்தவாதம்

பெரியாரிடமிருந்து பிரிந்து முழு நேரப் பொதுவுடைமைவாதியாக வளர்ந்த ப. ஜீவானந்தம்,

1. இலக்கியத்தில் சோசலிஸ்டு எதார்த்தவாதம்,
2. சங்க இலக்கியத்தில் சமுதாயக் காட்சிகள் முதலிய நூல்கள் மூலமாகவும்
3. 1958இல் தொடங்கிய தாமரை இதழ் மூலமாகவும் வர்க்க அடிப்படையில் பழந்தமிழ் இலக்கியங்களுக்கு விளக்கம் அளித்தார்.

# ப. ஜீவானந்தம்

வர்க்கப் பார்வை அடிப்படையில் புதுவிளக்கம் கண்ட தொடர்கள்

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

"கரும்பு போல்
கொல்லப் பயன்படும் கீழ்"

---

### மார்க்சியப் பார்வையால் புதுவிளக்கம் கண்டவை


1. சிலப்பதிகாரம் குடிமக்கள் காவியமாக விளக்கம் கண்டது.
2. இராமன் சகோதரத்துவம் நிறைந்தவனாக்க் காணப்பட்டான்.
3. பள்ளு, குறவஞ்சி, நந்தனார் சரித்திரம் – ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகப் பதிவாயின.
4. தி.மு.க.வை ஒட்டி உருவான சங்ககாலம் பொற்காலம் தகர்ந்தது. ஒருபக்கம் செழிப்பும் மறுபக்கம் ஏழ்மையும் உடைய வர்க்கச் சமுதாயமாகச் சங்ககாலம் புது விளக்கம் கண்டது.
5. சிலப்பதிகாரம் வணிக வர்க்கத்தின் இலக்கியமானது.

உருவவியல் அல்லது வடிவவியல் திறனாய்வாளர்கள் இலக்கியத்தை இரசனைப் பொருளாக – சாய்வு நாற்காலிப் பண்டமாக விளக்கிக்கொண்டிருந்த சூழலில்  மார்க்சியப் பார்வை புது வெளிச்சம் தந்ததுது.

## மார்க்சியத் திறனாய்வின் பயன்கள்

1. இலக்கியம் கற்றுக்கொள்வதற்குரிய ஒரு பொருளாக மாறியது.
2. தீமையை அழிப்பதற்கான ஈடிணையற்ற போர்க்கருவியாக மாறியது
3. மனிதனை – அவன் சமூகத்தை – ஓர் உயர்ந்த தளத்தில் அவற்றிற்குரிய சிக்கலான – புதிரான தன்மையோடு புரிந்துகொள்வதற்கான ஒரு நெறிமுறையாகக் காண வழிகாட்டியது.

# தொ. மு. சிதம்பர ரகுநாதன்



தொ.மு.சி. ரகுநாதன் என்று அழைக்கப்படும் இவர் தினமணி, சக்தி, சாந்தி ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றினார்

கவிஞராக, மொழிபெயர்ப்பாளராக, நாவலாசிரியராக, சமூகப்பார்வை உடைய ஆராய்ச்சி அறறிஞராக, திறனாய்வாளராகப் பல தளங்களில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றினார்.

பாரதி ஆய்வில் தலையாய ஆய்வாளராக உயர்ந்து நிற்கிறார்.

பாரதியும் ஷெல்லியும், கங்கையும் காவிரியும், பாரதி காலமும் கருத்தும், பாரதி – சில பார்வைகள், பாஞ்சாலி சபதம் – உறை பொருளும் மறைபொருளும் எனப் பல பாரதி ஆய்வு நூல்கள்.

# தொ. மு. சிதம்பர ரகுநாதன்

இளங்கோ அடிகள் யார்?

சமுதாய இலக்கியம் ஆகிய நூல்கள் அவருடைய சமூகப் பார்வை மிக்க வரலாற்றுப் பார்வையையும் ஆராய்ச்சிப் புலமையையும் புலப்படுத்துவன. இவை இலக்கிய ஆராய்ச்சித் தளத்திற்குள் போய்விடுகின்றன.

இலக்கிய விமர்சனம் (1948) என்ற கட்டுரைத் தொகுப்பு இவரது திறனாய்வுத் திறனை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இலக்கிய விமர்சனம் – நூல், கலை இலக்கியம் பற்றிய வியப்புணர்வோடும் இரசனை உணர்வோடும் கருத்துக்களை விதைத்துச் செல்கிறது. மார்க்சிய அழகியல் அறிவோடு கூடிய திட்டவட்டமான பார்வை அதில் வெளிப்படவில்லை.

# தொ. மு. சிதம்பர ரகுநாதன்

ஒன்றுக்கொன்று முரணான பார்வைகள்

எதிர்நிலைகளைப் பற்றிய நுட்பமான புரிதலின்மை வெளிப்படுகிறது.

இலக்கியம்

யதார்த்தமானது x கனவுக்குழந்தை

| | | |
|---|---|---|
| நூலை விமர்சிப்பதை விட்டுவிட்டு, நூலாசிரியரைப் பற்றி எழுதுகிறார்கள் | X | எழுத்தாளனுக்கு வேண்டியது நேர்மை, ஒழுக்கம் முதலிய பண்புகள். |

மார்க்சியத் திறனாய்வாளர்களின் மார்க்சிய அழகியல் அறிவைப் பெறுவதில் உள்ள ஆர்வமின்மைதான் அவருடைய பாரதி பற்றிய எழுத்துக்கள் கூடத் திறனாய்வாக இல்லாமல் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளாக விளங்குகின்றன.

# தொ. மு. சிதம்பர ரகுநாதன்

வரலாற்றுச் செய்திகளைத் திரட்டிச் சமூகப் பார்வையுடன் இலக்கியத்தை விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட ஆர்வம் இலக்கியத் திறனாய்வியல் பற்றிய தேடலில் இல்லை.

கு.ப.ரா. வையும் பிச்சமூர்த்தியையும் தூற்றி எழுதி, புதுக்கவிதையைத் தந்தி பாஷை என்று கேலி செய்யும் நிலைக்குத் தள்ளாமல் காக்கத் தவறினார்.

சாமார்த்தியமாய் விமர்சன ஈடுபாட்டைத் தொழில்முறையான எழுத்துக்கு அடகுவைத்து ஜீவனோபாயம் செய்யப்போய்விட்டார். நமக்கு நஷ்டம் ஒரு விமர்சன சாம்ராஜ்யம். - தமிழவன்

# தொ. மு. சிதம்பர ரகுநாதன்

இலக்கியத்தை எந்தச் சார்பும் தொடர்பும் அற்றதொரு தனிப்பொருளாக இரசனை முறைத் திறனாய்வாளர்களால் கொண்டாடிக்கொண்டிருந்த சூழலில் இலக்கியத்திற்கும் சமூக இருப்பிற்கும் உள்ள பிணைப்பைத் தன்னுடைய எழுத்துக்களால் தெளிவுபடுத்திக் காட்டினார்.

சோசலிச எதார்த்தவாத நாவல் இலக்கியப் போக்கைத் தன் “பஞ்சும் பசியும்” நாவல் மூலம் தொடங்கி வைத்தார். தமிழ் இலக்கிய ஆய்வை இலக்கண ஆய்வு நிலையிலிருந்தும், ரசனை ஆய்வு நிலையிலிருந்தும் சமூகநிலை ஆய்வு என்னும் ஆழமான தளத்துக்கு இட்டுச்சென்று, ஆய்வின் எல்லையை விசாலப்படுத்தினார். “பாரதியும் ஷெல்லியும்”, “கங்கையும் காவிரியும்” ஆகிய நூல்களின் மூலம் ஒப்பிலக்கியத் தடத்தைத் தமிழில் விரிவுபடுத்தியவர். “இளங்கோவடிகள் யார்?” என்னும் நூலின் வழி, தமிழகத்தில் சமய உருவாக்கங்களைப் போல நடந்த புதுப்புதுச் சாதி உருவாக்கங்களைத் துலக்கி, சாதி இறுக்கங்களின் பொய்மையைப் பளிச்சென வெளிப்படுத்தியவர். - விக்கிபீடியா

# தொ. மு. சிதம்பர ரகுநாதன்

இலக்கியத்தை எந்தச் சார்பும் தொடர்பும் அற்றதொரு தனிப்பொருளாக இரசனை முறைத் திறனாய்வாளர்களால் கொண்டாடிக்கொண்டிருந்த சூழலில் இலக்கியத்திற்கும் சமூக இருப்பிற்கும் உள்ள பிணைப்பைத் தன்னுடைய எழுத்துக்களால் தெளிவுபடுத்திக் காட்டினார்.

சோசலிச எதார்த்தவாத நாவல் இலக்கியப் போக்கைத் தன் “பஞ்சும் பசியும்” நாவல் மூலம் தொடங்கி வைத்தார். தமிழ் இலக்கிய ஆய்வை இலக்கண ஆய்வு நிலையிலிருந்தும், ரசனை ஆய்வு நிலையிலிருந்தும் சமூகநிலை ஆய்வு என்னும் ஆழமான தளத்துக்கு இட்டுச்சென்று, ஆய்வின் எல்லையை விசாலப்படுத்தினார். “பாரதியும் ஷெல்லியும்”, “கங்கையும் காவிரியும்” ஆகிய நூல்களின் மூலம் ஒப்பிலக்கியத் தடத்தைத் தமிழில் விரிவுபடுத்தியவர். “இளங்கோவடிகள் யார்?” என்னும் நூலின் வழி, தமிழகத்தில் சமய உருவாக்கங்களைப் போல நடந்த புதுப்புதுச் சாதி உருவாக்கங்களைத் துலக்கி, சாதி இறுக்கங்களின் பொய்மையைப் பளிச்சென வெளிப்படுத்தியவர். - விக்கிபீடியா

# தொ. மு. சிதம்பர ரகுநாதன்

## சோசலிச யதார்த்தவாதம் என்றால் என்ன?

“நடைமுறையில் உள்ள இந்த முதலாளித்துவச் சமூக அமைப்பு என்பது நிரந்தரமானது. மாற்றப் படமுடியாதது என்கிற நூற்றாண்டுக்கால நம்பிக்கையை, ஒரு இலக்கியப் படைப்பானது, இது மாற்றப்படக்கூடியதுதான், நிரந்தரமானது அல்ல என்கிற சிறு சலனத்தை, படிப்பவனின் மனதில் உருவாகுமானால், அதுவே “SOCIALIST PROBLEM NOVEL". - ஏஞ்சல்

யதார்த்தவாதம் என்பது வாழ்வின் மெய்ம்மைகளை சார்பு இன்றி விண்டு காட்டுவதாகவும் இருக்கலாம், உழைப்பாளி வர்க்க சார்பு நிலை எடுத்து அவற்றை விமர்சனப்பூர்வமாகச் சித்தரிப்பதாகவும் இருக்கலாம். பின்னதை விமர்சனப்பூர்வ யதார்த்தவாதம் என்கிறோம். இவற்றின் அடுத்த நிலையாக, வாழ்வின் அவலமான மெய்ம்மைகள் அவற்றின் உள் முரண்களால் மோதி உடைந்து இன்னும் சிறந்த சமுதாயம் நோக்கி நகர்கிறது என்பதையும் சேர்த்துச் சொல்வது அமைகிறது. அதையே சோசலிச யதார்த்தவாதம் என்கிறோம்.

- அருணன்

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 4

## சமூகவியல் திறனாய்வு 03

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

07.12.2020

# நா.வா. வின் திறனாய்வு



(1917 - 1980)

மார்க்சியக் கருத்தாக்கங்களுக்கான கட்டுமானப் பணியைத் தமிழ் இலக்கியச் சூழலில் சுறுசுறுப்பாக நிகழ்த்திக் காட்டியவர் நா. வானமாமலை.

அவர் நடத்திய ஆராய்ச்சி இதழ் ஆய்வுப் பெட்டகம்.

# நா.வா. வின் திறனாய்வு

தத்துவம், பண்பாடு, வரலாறு, மானிடவியல், நாட்டுப்புறவியல், கலை, இலக்கியம், மார்ச்சியம், பிராய்டிசம் எனப் பல்புல அறிவைத் தன் கலை இலக்கிய ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தி நா.வா. மாணவர் பரம்பரையை உருவாக்கிய சாதனையாளர்.

மார்க்சியமே உலகத்தை உன்னதமாக உருவாக்கும் என்ற நம்பிக்கை ஒளி படர்ந்திருந்த காலத்தில் உற்சாகமாக எழுதியவர்.

தேசியவாத்த்திற்குள் சுருங்கிப்போன இன்றைய மார்ச்சியச் சூழலில் அவரது ஆய்வு சரியாக உணரப்படாமல் போகலாம்.

# நா.வா. வின் திறனாய்வு

தொ.மு.சி. ரகுநாதனோடு ஒப்பிடுகையில்

1. புதுக்கவிதைகளை ஏற்கத்தொடங்கினார்
2. மார்க்சிய அலகியல் பற்றித் தனியாகச் சிந்தித்தார்
3. பல்துறை அறிவை ஆய்வுக்குப் பயன்படுத்தினார்.

இருந்தபோதிலும் தொ.மு.சி. ரகுநாதனைப் போலவே நா.வா.வும் பெரிதும் ஆராய்ச்சியாளராகத்தான் வெளிப்பட்டார்.

பொருள்முதல்வாதச் சிந்தனையின் அடிப்படையில் தமிழ்,

1. நாட்டுப்புறவியல் ஆராய்ச்சி
2. தமிழர் த்த்தவம் குறித்த ஆராய்ச்சி
3. பண்பாட்டு ஆராய்ச்சி

ஆகிய புலங்களில் ஆராய்சிக்கு வித்திட்டவர்.

# நா.வா. வின் திறனாய்வு

நா.வா. என்ற திறனாய்வாளர்

1. புதுக்கவிதை - முற்போக்கும் பிற்போக்கும்
2. மார்க்சிய அழகியல்
3. இலக்கியத்தில் உள்ளடக்கமும் உருவமும்

ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

நா.வா.வின் உள்ளடக்கப் பார்வை

முற்போக்குச் சிந்தனை இருந்தால் முதுகில் தட்டிக் கொடுப்பார்.

இல்லையென்றால் முதலாளித்துவக் கலைக் கயவாளிகள், மனச்சாட்சியை வெளிக்காசுக்க விற்றுவிட்ட இலக்கிய ஜீடாஸ்கள் என்று வசைபாடுபார்.

# நா.வா. வின் திறனாய்வு

கட்சி ஊழியப் பார்வை

படைப்புத் தொழிலில் உள்ள எண்ணி மாளாத சிக்கலான பிரச்சனைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் மனிதச் செய்லபாட்டின் சாரத்தைச் சுருக்க முயல்பவர். டால்ஸ்டாயை லெனின் எவ்வகையில் ஏற்றார் என்பதைப் பார்க்கக்கூட நேரமில்லாத கட்சி ஊழியர்.

"மக்கட் படையின் அணியில் ஒரு கவிஞன் எங்கிருக்கிறான் என்பதைப் பார்த்தே அவனது கவிதையுள்ளடக்கம் முற்போக்கா, பிற்போக்கா என்று தீர்மானிக்க வேண்டும்" – நா.வா.

# நா.வா. வின் திறனாய்வு

> "நான் அவசர விமரிசனங்கள் எழுதுகிறவனல்ல; ஆழ்ந்த இலக்கிய ஆய்வின் முடிவுகளையே நான் வெளியிட விரும்புகிறேன்." – நா.வா.

நா.வா.வின் தத்துவ ஆராய்ச்சிக்கு மட்டுமே பொருந்தும் கூற்று.

நா.வா.வின் கல்வி நெறியாளர்களின் நேர்கோட்டுப் பார்வையும் க.நா.சு. குழுவின் அப்பட்டமான குழுப்பார்வையும்.

புதுக்கவிதையை வசைபாடல்,

1. தனிமனிதப் பேய்ப்படைப்புகள்
2. மனநோயாளிகளின் வெளியீடு
3. சாக்குருவி வேதாந்திகள்
4. இணைவிழைச்சு வக்கிரங்கள்
5. நிராசைப் புலம்பல்கள்
6. சொறிந்து சுகம் காணுகிற சொறி சிரங்கு நோயாளிகள்
7. பலவீனமான மனிதர்களது கூக்குரல்கள்

# நா.வா. வின் திறனாய்வு

நா.வா.வின் கல்வி நெறியாளர்களின் நேர்கோட்டுப் பார்வையும்
க.நா.சு. குழுவின் அப்பட்டமான குழுப்பார்வையும்.

தன்னுடைய கட்சி சார்ந்த கலை இலக்கியப் பெருமன்றத்தைச் சார்ந்த கவிஞர் மீராவின் கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் - நூல் குறித்து மட்டம் குரலை மாற்றிப் பேசுகிறார்.

விமர்சனங்களை எதிர்கொள்ளல்

முற்போக்குக் கவிஞர்களின் எழுத்தில் கவித்துவத்திற்குப் பதிலாக பிரச்சார நெடி மூக்கைத் துளைக்கிறது – விமர்சனத்திற்கு அகவயவாதிகளைவிட, இவர்கள் ஆரோக்கியமானவர்கள்; ஏனென்றால் இவர்கள் சமுதாய விமர்சகர்கள் – என்று கூறிக் காப்பாற்றுகிறார்.

# நா.வா. வின் திறனாய்வு

கவிதையை இயந்திரத் துப்பாக்கியாகக் காணத்துடிப்பவர்

மக்களது இன்ப வாழ்க்கைக்குப் பிரச்சாரம் செய்வது பெருமப்படத்தக்கதோர் செயல் – நா.வா.

கருத்துக்கேற்ற வடிவமின்றி வெளிப்படுத்தப்படும் இலக்கியம் பிணமாகத்தான் இருக்கமுடியும். வடிவம் வாய்த்ததால் மிகச்சிறிய கருத்துக்கள் பல வாழ்ந்துகொண்டிருக்கின்றன. இந்த அழகியல் வரலாற்று உணர்வு கொண்டு நா.வா. காணாமல் போய்விட்டார்.

# நா.வா. வின் திறனாய்வு

மார்க்சியத்தின் கலை இலக்கியத் தேடல்

1. இயங்கியல் பொருள்முதல்வாத நோக்கிற்கு ஏற்ப அகத்திலிருந்து (Subject) தொடங்காமல் புறத்திலிருந்து (Object) தொடங்குகிறது.
2. கருத்திலிருந்து தொடங்காமல் செயல்பாட்டிலிருந்து தொடங்குகிறது
3. மார்ச்சிய அறிவுத்தோற்றவியம்: பொருள்தான் புறவய உண்மை, அது சுதந்திரமாக இயங்குகிறது.
4. கலையின் தொடக்கப்புள்ளி, புறவயமானதோர் பொருள் அல்லது நிகழ்ச்சிதான். ஆனால் மனிதன் இல்லாமல் கலை வளர்ச்சி பெற முடியாது.

– நா.வா.

சிந்தனையும் பொருளும் உடனிருப்புக் கொண்டவை. – நா.வா.

# நா.வா. வின் திறனாய்வு

படைப்பு குறித்த லெனினியத் தத்துவப் பார்வை...

புறவயமான உலகை மனித உணர்வு (உள்ளம்) பிரதிபலிப்பது மட்டுமல்லாமல் அதனைப் படைக்கவும் (உள்ளத்தில்) செய்கிறது – லெனின்.

அகவயமான உள்ளம் புறவயமான இயற்கையின்மீது தொழிற்படுகிறது. – நா.வா.

தத்துவப் புரிதலுக்கும் திறனாய்வுச் செயல்பாட்டுக்கும் இடையே நா.வா.வின் இடைவெளி இட்டு நிரைக்க முடியாதது. இவருடைய திறனாய்வு முழுமையான வாழ்க்கையை நோக்கி இல்மல் கட்சியை நோக்கியதாக அமைந்துவிட்டது.

# நா.வா. வின் திறனாய்வு

அறிமுகப்படுத்திய தத்துவங்கள்

சர்ரியலிசம், எக்ஸிஸ்டென்ஷியலிசம், பிராய்டியம், தனிமனித வாதம் – பிற்போக்குத் த்த்துவங்கள் எனக் குறிப்பிட்டாலும் தமிழுக்கு அறிமுகப்படுத்தினார்.

மனித நேயம், யதார்த்த வாதம், விமர்சன யதார்த்தவாதம், சோசலிச யதார்த்தவாதம், நவீனத்துவம், பிரதிபலிப்புக் கொள்கை முதலியவற்றைப் பயன்படுத்தியவர் என்ற நிலையில் செல்வாக்கு மிக்க திறனாய்வாளர்.

நிறுவனம் சார்ந்த கம்யூனிஸ்ட்

கட்சியால் திறனாய்வில் செழுமைப்படாது போய்விட்டார்.

வடிவ இயல் திறனாய்வாளர்களுக்கு எதிரான அழகியல்வாதப் போரை உயர்ந்த தளத்தில் நடத்தாமல் கட்சி சார்ந்து தரமிழக்கச் செய்து தனது வளர்ச்சியை அழித்துக்கொண்டார்.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 4

## சமூகவியல் திறனாய்வு 04

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

07.12.2020

# க. கைலாசபதியின் திறனாய்வு



(1933 - 1982)

கல்வியாளர்கள் மட்டத்தில் மார்க்சியத் திறனாய்வு வலுப்பெறுவதற்குக் காரணமாக இருந்தவர்

க. கைலாசபதி

வாரப்பத்திரிகை ஆசிரியர், பல்கலைக்கழகப் பேராசிரியர், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தோடு இணைந்தவர், மார்க்சிய அறிஞர் ஜார்ஜ் தாமனிடம் முனைவர் பட்டத்திற்காகப் பயின்றவர்.

# க. கைலாசபதியின் திறனாய்வு

தமிழ்க் கல்வியும் ஆங்கிலப் புலமையும் எடுத்துக்கொண்ட பொருளை பல்வேறு கோணங்களில் விவாதிக்கும் ஆய்வுப் பாங்கில் உயர்ந்த இடத்தில் வைக்கத்தக்கவர்.

திறனாய்வில் மார்க்சிய அழகியல் பார்வைக்குப் பதிலாக அரசியல் பார்வையை முன்னிறுத்துகிறார் என்பது இவர்மீதான விமர்சனம்.

தி.மு.க. அரசியல் கருத்து வெளிப்பாடுகள்

1. மு.வ.வின் சங்க இலக்கியத்தில் இயற்கைக் காட்சிகள்
2. வ.சுப. மாணிக்கத்தின் தமிழ்க்காதல்

இடதுசாரி அரசியல் கருத்து வெளிப்பாடுகள்

கைலாசபதியின் – 1. தமிழ் வீரயுகப் பாடல்கள்
2. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்

# க. கைலாசபதியின் திறனாய்வு

கைலாசபதியின் சிறுகதை, புதினம், புதுக்கவிதை குறித்த எழுத்துக்கள் இலக்கியத் திறனாய்வு என்ற எல்லையைத் தாண்டி அரசியல் கருத்துக்களை முன்வைப்பவை.

இலக்கிய ஆராய்சி என்ற அளவில் தரம் மிக்கவை x திறனாய்வு என்ற அளவில் உள்ளடக்கத்தை மட்டும் பார்ப்பவை.

## தி.சு. நடராசன் விமர்சனம்

இலக்கியத்தைக் கண்டறிய வரலாற்ற நெறி அவசியமானது அதேசமயம் ஒரு நாவல் அழகியல் ரீதியாக, எப்படித் தனது கருப்பொருளை வெளிப்படுத்துகிறது என்பதைத் தெரிந்துகொள்வது தேவை.

# க. கைலாசபதியின் திறனாய்வு

இலக்கிய ஒப்பீட்டு முறை

ஒப்பியல் இலக்கியம், இரு மகாகவிகள், தமிழ் வீரயுகப் பாடல்கள் எனத் தனது ஒப்பீட்டு முறைத் திறனாய்வில் மூலம் தமிழ்த் திறனாய்வைச் செழுமைப்படுத்தினார்.

தமிழ்ப் புதினம், சிறுகதை பற்றியெல்லாம் உத்தி, நயம், அழகு என்ற அளவில் நிற்காமல் அவற்றை விரிவான சமூக வரலாற்றுப் பின்புலத்தில் விளக்கியதன் மூலம் கல்வியாளர்கள் நடுவில் இப்புத்திலக்கியங்களுக்குச் சிறப்பான அங்கிகாரத்தை ஏற்படுத்தித் தந்தவர்.

# க. கைலாசபதியின் திறனாய்வு

மேலை நாட்டு இக்கியக் கொள்கைகளை அறிமுகம் செய்தவர்

(இலக்கியமும் திறனாய்வும்)

தமிழ்த் திறனாய்வை நுட்பமாகப் பகுத்துக் காட்டியவர்

1. இரசனை முறைத் திறனாய்வு
2. பண்டிதத் திறனாய்வு
3. பாண்டித்தியத் திறனாய்வு
4. புத்திலக்கியத் திறனாய்வு
5. சமூகவியல் திறனாய்வு

# க. கைலாசபதியின் திறனாய்வு

“உருவம், உள்ளடக்கம் என்ற வீண் வாத்த்தில் அமிழ்ந்து போகாமல், வரலாற்றுப் பார்வை, சமூக நோக்கு, அழகியல் அக்கறை ஆகிய மன்றையும் ஒன்றுக்கொன்று அனுசரணையானவையாகவும் ஒன்றையொன்று பின்னிச் சார்ந்தனவாகவும் கொண்டு இலக்கியப் படைப்புகளை ஆராய்வதே” எனது நோக்கம் – க. கைலாசபதி

க. பஞ்சாங்கத்தின் விமர்சனம்

1. சமூகப் பார்வை அளவுக்கு அழகியல் பார்வை வெளிப்படவில்லை.
2. திறனாய்வை ஒரு கல்வியாக வளர்க்கவே அவர் எழுத்து பயன்படுகிறது. ஆனால், வாழ்க்கைக்குள் மனிதனை இழுத்துச் செல்லவில்லை.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 4

## சமூகவியல் திறனாய்வு 05

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

07.12.2020

# கோ. கேசவனின் திறனாய்வு

க. கைலாசபதியைப் பின்பற்றி எழுதுபவர் என மதிப்பிடப்படுபவர்.

வரலாற்றுப் பொருள்முதல்வாதத்திற்குக் கூடுதல் அழுத்தம் கொடுத்த எழுதப்பட்ட நூல் பள்ளு இலக்கியம் – ஒரு சமூகவியல் பார்வை.

க. கைலாசபதி போலவே ஆய்வியல் முறைப்படி எழுதி வெளியிட்டார்.

1. மண்ணும் மனித உறவுகள்ம்
2. இலக்கியமும் இயக்கங்களும் முதலியன.

# கோ. கேசவனின் திறனாய்வு

## இலக்கிய விமர்சனம் – ஒரு மார்க்சியப் பார்வை

இந்நூலின் வழியாக கலை இலக்கியம் பற்றிய ஆழமான புரிதலை நோக்கித் தமிழ் வாசகனை விடாப்பிடியாக இழுத்துச் சென்றார்.

கலையின் தோற்றம் – கலைகளின் தன்மை – கலையும் வாக்கமும் – மேல்தளமும் அடித்தளமும் – கலைஞனும் சமகமும் – கலைஞனும் சுதந்திரமும். உருவமும் உள்ளடக்கமும் – மார்க்சியமும் அழகியலும் முதலிய கலை இலக்கியம் தொடர்பான அடிப்படைப் பிரச்சனைகளை எடுத்துரைக்கும் நூல் இது.

# கோ. கேசவனின் திறனாய்வு

## கேசவனின் மார்க்சிய அழகியல் குறித்த பார்வை

எல்லாவற்றையும் புறநிலையாகப் பார்க்கவேண்டும் என்ற மார்க்சியக் கொள்கைக்கு எதிராக குழுவாதத்தால் அகவயமாகப் பார்த்துள்ளார். கைலாசபதியைப் போலவே நிறுவனம் சார்ந்து கலை இலக்கியங்களின் அரசியல் பயன்பாடு என்ற ஒன்றிற்கு அழுத்தம் தந்துவிடுகிறார்.

உயிரோட்டமுள்ள வாழ்க்கைக்கு முதன்மை அளிக்கத் தவறிவிட்டார்.

மார்க்சியத் திறனாய்வுப் பார்வையை வர்க்கப் பார்வை, வரலாற்றுப் பொருள்முதல்வாதப் பார்வை என்ற நிலையிலிருந்து மாற்றி மார்க்சிய அழகியலை நோக்கி வேகமாகச் செலுத்தியவர் கோ. கேசவன்.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு


அலகு 4

## சமூகவியல் திறனாய்வு 06

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

07.12.2020

# கா. சிவத்தம்பியின் திறனாய்வு



(1932 – 2011)

மார்க்சிய இலக்கியவட்டத்தில் இருந்தே கலை இலக்கியத்தில் அழகியல் வாதத்திற்கு அழுத்தம் கொடுத்தவர் கார்த்திகேசு சிவத்தம்பி

இலக்கியம் அழகுணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டது. கலையழகற்ற கருத்தாழமுள்ள ஆக்கம் இலக்கியம்காது – கா. சிவத்தம்பி

# கா. சிவத்தம்பியின் திறனாய்வு

1

முந்தைய மார்ச்சியத் திறனாய்வாளர்களில் பலர் மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்றான அடித்தளம் - மேல்தளம் என்ற கோட்பாட்டில்

மேல்தளம்

கலை இலக்கியங்கள் மேல்தளத்தைச் சேர்ந்தவை

அடித்தளம்

அடித்தளமான சமூகப் பொருளதார உற்பத்தி உறவுகளைச் சார்ந்து வாழ்பவை என்று கருதினர்.

2

சிலர் தொடக்கத்தில் கலை இலக்கியங்கள் பொருளாதார உறவையே சார்ந்து நின்றன என்றாலும், சமூக வரலாற்றின் வளர்ச்சிப்போக்கில், ஒன்றையொன்று பாதித்து இயங்கக்கூடிய இயங்கியல் உறவு கொண்டு விளங்குகின்றன எனக் கண்டனர்.

# கா. சிவத்தம்பியின் திறனாய்வு

3

கார்த்திகேசு சிவத்தம்பி, நுஃமான், தமிழவன், ஞானி முதலியோர், கலை இலக்கியங்கள், தங்களுக்காகத் தனியே இயங்குகின்ற உள்ளார்ந்த கலை விதிகளைக் கொண்டு விளங்குகின்றன என்று கலை இலக்கியங்களுக்குத் தனிப்பெரும் இடத்தை வழங்கினர்.

க. சிவத்தம்பி, மார்க்சியச் சார்பாளராகவும், கல்வியாளராகவும் இருந்தபோதும் மேற்கண்ட பார்வை காரணமாக, குழுவாதம், அரசியல் சார்பு ஆகியவற்றுக்கு அப்பால் நின்று கலை இலக்கியங்களை விவாதித்தார்.

திறனாய்வுப் புலமைக்குச் சான்றாகும் நூல்கள்

1. தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், 2. நாவலும் வாழ்க்கையும், 3. இலக்கியமும் கருத்து நிலையும

# கா. சிவத்தம்பியின் திறனாய்வு

க. கைலாசபதியை ஆய்வுநெறித் திறனாய்வாளர் (Scholar Critic) என்று தி.சு. நடராசன் சுட்டுவார். இச்சுட்டல் க. சிவத்தம்பிக்குத்தான் பொருந்தும். கல்வி அறிவும் இலக்கியப் புலமையும் ஒன்றிணைந்து இயங்குகிறது இவர் எழுத்தில். – க. பஞ்சாங்கம்

திறனாய்வுச் செயல்பாடுகள்

1. தமிழ் இலக்கியத் திறனாய்வில் கையாளப்படும் கலைச்சொல்லாக்கத்தில் உள்ள பொறுப்பின்மையைச் சுட்டிக்காட்டினார்
2. தமிழ் இலக்கியத் திறனாய்வாளர்கள் தமிழிலக்கியம் அனைத்தையும் ஒரு தொடர் நிகழ்வுகளாக – முழுமையாகக் காணத்தவறுவதை எடுத்துரைத்தார்.

# கா. சிவத்தம்பியின் திறனாய்வு

திறனாய்வுச் செயல்பாடுகள்

3. ஆண்கள் இலக்கியமயப்படுத்திய பெண்மைக் கோட்பாட்டையே பெண் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்கான கோட்பாடாக்க் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

4. திறனாய்வைத் தற்காலச் சமூகத் தேவையுடனும், தற்காலச் சமூக அமைப்பின் குணத்துடனும் இணைத்து விளக்குவதில் தனிக்கவனம் செலுத்தியவர்.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு


அலகு 4

## சமூகவியல் திறனாய்வு 07

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

07.12.2020

# ஞானியின் திறனாய்வு



(1935 – 2020)

கார்த்திகேசு சிவத்தம்பி குறிப்பிட்டுக் காட்டிய "சுதந்திரமான கலை இலக்கியம்" என்ற பார்வையை மேலும் அழுத்தமாகவும் வெளிப்படையாகவும் வேகமாகவும் பேசியவர் ஞானி.

மார்க்சியத்தை வெறும் பொருளாதார வாதமாகக் குறுக்குவதை ஏற்காதவர். கலை இலக்கியம் மனிதனைப் படைப்பது பற்றிய பிரச்சனைகளாகவும் இருக்கின்றன எனக் கண்டவர்.

# ஞானியின் திறனாய்வு

ஆன்மிகத்தையும் பொருள்முதல்வாதத்தையும் இணைக்கும் ஞானியின் பார்வைக்கு எதிராக,

தத்துவ வெல்டர்

திரிபுவாதி

தனிமனிதவாதி

என்றெல்லாம் விமர்சிக்கப்பட்டார்.

ஞானியின் விமர்சன முறை உருவாக்கம்

1. புத்தகக் கல்வியால் மட்டும் உருவானதல்ல.
2. அவலம் மிக்க சமூக வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் பெற்ற அனுபவத்தினால் கனிந்தது.

# ஞானியின் திறனாய்வு

ஞானியின் மார்க்சியம்

இந்தியம் சார்ந்த்தாக, தமிழகம் சார்ந்த்தாக மார்க்சியம் விளக்கம் பெறுகிறது.

அனுபவத் தெறிப்புகளாக – தத்தவத் தேடல்களாக அமைந்துள்ளது.

எப்போதும் சூத்திரங்கள் எனக்குப் போதுமானவை அல்ல; சூத்திரங்களினுடேயும் அப்பாலும் உண்மைகளைத் தேடிச் செல்வது என் இயல்பு - ஞானி

புராணம், மதம் ஆகியவற்றுக்கும் இலக்கியத்துக்குமான தொடர்பு பற்றிய இவரது பார்வைகள் தனித்துவமானவை.

மார்க்சியத் திறனாய்வு, ஞானியின் எழுத்தில்தான் வாழ்க்கை பற்றிய திறனாய்வாக முழுப் பண்புடன் விளக்கம் பெறுகிறது.

# ஞானியின் திறனாய்வு

பாரதியின் கண்ணன் பாட்டுக் குறித்த ஞானியின் திறனாய்வில்,

“நிறைவு செய்துகொள்ள இயலாத நிலையில்தான் பித்தம் ஏறிய நிலையில், உக்கிரத்தோடு இவன் கேள்வி கேட்கிறான். எப்படி, ஏன் இது நேர்ந்தது? எனக்கு இதைச் செய்தவர் யார்? ஏன் செய்யவேண்டும்? எனக்கு விடுதலை சாத்தியமா? இந்த உலகத்தைப் படைத்து ஆட்டுவிப்பது பிசாசா? தெய்வமா? இத்தகைய கூர்மையான கேள்விகள்தாம், இவனை வரலாற்றாய்வுக்குள்ளும் அறிவியல் முதலிய ஆய்வுகளுக்குள்ளும் இடைவிடாது துரத்துகின்றன. இந்தத் துரத்தலின் வேகத்தையும் வேதனையையும் இடையிடையே பெறும் வெற்றிகளையும் வெற்றிகளை இழந்துவிட்டு மீண்டும் துரத்தப்படுதலையுமே இவனது கலை இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.”

தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்றில் ஞானிக்கு முன்பு இத்தகைய அழுத்தமான வாழ்க்கை உணர்வு வெளிப்பாடுகளைக் காண்பது அரிது.

# ஞானியின் திறனாய்வு

ஞானியின் திறனாய்வுப் பார்வை குறித்து அ. மார்க்ஸ்

1. ஞானியின் வாழ்க்கை பற்றிய தத்துவப்பார்வை – மார்க்சின் அந்நியமாதல் குறித்த சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டது.
2. சாராம்சவாத்த்தையும் மனிதாபிமானத்தையும் தாண்ட இயலாதவராக இயங்குவதால், இவரிடம் கறாரான விஞ்ஞானப் பார்வை குறைவு.
3. மரபுகளுக்கும் கருத்துமுதல்வாதச் சிந்தனைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிற தவறைச் செய்கிறார்.

ஞானியின் திறனாய்வுப் பார்வை குறித்து க. பஞ்சாங்கம்

1. கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் என்ற பிரிவினை கிடையாது. இரண்டையும் இணைத்துப் பார்க்கிறார்.
2. சமகால வாழ்க்கை குறித்த விசாரணையாக அமைகிறது
3. அவரது எழுத்திற்கு அடிப்படையாக அமைந்தது தத்துவத் தேடல்தான்.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு


அலகு 4

## சமூகவியல் திறனாய்வு 08

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

07.12.2020

# தமிழவனின் திறனாய்வு



(கார்லோஸ் சபரிமுத்து)

நா. வானமாமலையின் தொடர்பால் மார்க்சியச் சிந்தனை உலகிற்கள் சென்ற தமிழவன், மார்க்சிய அரசியல் பார்வைகளையும் வெ. சாமிதான் தோன்ற மார்க்சிய எதிரணியின் பார்வைகளையும் கடந்து சென்றதால் இருதரப்பாலும் விமர்சிக்கப்பட்டவர்.

எஸ்.வி. ராஜதுரையின் எக்ஸிஸ்டென்ஸியலிசம், அந்நியமாதல் ஆகிய கனமான நூல்களின் வருகையும், அவற்றை ஆர்வத்தோடு கவனித்த சிறுபத்திரிகைச் சூழலையும் கவனித்த தமிழவன் ஸ்ட்ரக்சுரலிசம் என்ற நூலைத் தமிழல் எழுதினார்.

# தமிழவனின் திறனாய்வு

அமைப்பியல்

அமைப்பியல் திறனாய்வை அறிமுகப்படுத்தியதோடு அதைத் தமிழ் இலக்கியத் திறனாய்வில் எவ்வாறு பயன்படுத்தவது என்பதையும் செய்து காட்டினார்.

ஜே.ஜே. சில குறிப்புகள்: புதுவகை நாவலும் புதுவகை விமர்சனமும், திருப்பாவை – ஓர் அமைப்பியல் விமர்சனம் ஆகிய கட்டுரைகள் அமைப்பியல் ஆய்வுக்குச் சான்றாகின்றன.

சிறுபத்திரிகைக் களத்திலும் கல்விப் புலத்திலும் அமைப்பியல் திறனாய்வு குறித்த சிந்தனை வளர்வதற்கு அடித்தளமிட்டார்.

# தமிழவனின் திறனாய்வு

இலக்கியத் திறனாய்வு என்பது...

உத்திநலம் காண்பது, நயம் பாராட்டுவது என ஒருசாரார்.

இலக்கியத்தை வரலாற்றுப் பின்னணியில் விளக்குவது என ஒருசாரார்.

இவ்விரு பார்வைகளையும் கடந்து பன்முகத்தன்மை கொண்டிலங்கும் படைப்பின் சிக்கலான குணம் எந்தவித்த்திலும் குறைந்துவிடாமல் திறனாய்வையும் பண்முகத்தன்மையைத் தேடி சிக்கல் நிறைந்த்தாக நடத்திக் காட்டுவதன் மூலம் படைப்பை படைப்புத்தளத்தில் அணுகுவதற்கான வழிமுறையை அமைப்பியல் கோட்பாடுகளின் மூலம் தமிழவன் செய்து காட்டுகிறார்.

விமர்சனமும் இலக்கியம் போலவே ஒரு நிகழ்வு - தமிழவன்

# தமிழவனின் திறனாய்வு


புதுத்திறனாய்வாளர்கள்
இலக்கியம் முதல் நிகழ்வு – விமர்சனம் அதை அண்டிப் பிழைக்கும் இரண்டாம் தரமான நிகழ்வு என்பர்.

இலக்கியம் எப்படி முதல் நிகழ்வோ அதுபோலவே விமர்சனமும் முதல் நிகழ்வுதான் – தமிழவன்.

---

கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் என்று பிரித்துப் பார்ப்பது தவறு என்ற கருத்தில் சிலகாலம் இருந்த தமிழவன் அமைப்பியல் வருகைக்குப் பிறகு பொருள்முதல்வாதம் ஒரு பொதுப்பார்வையாக ஏற்கப்படவேண்டியது என்றும் தன்னுடைய பொருள்முதல்வாதம் நாட்டுப்புற வாழ்வியல் சாந்த புதுப்பொருள்முதல்வாதம் என்று கூறுகிறார்.

# அ. மார்க்ஸ் திறனாய்வு



கி. ராஜநாராயணன் எழுத்தை அடிப்படையாக்க் கொண்டு படைப்பாளி – வாழ்க்கை – இலக்கியம் என்ற நூலை மார்க்சிய இலக்கியத் திறனாய்வுப் பார்வையில் எழுதியவர் அ. மார்க்ஸ்.

புதிய கோட்பாட்டத் தளங்களுக்கு இவர் நகர்ந்து சென்ற திறனாய்வுக் களத்தில் நவீனக் கோட்பாட்டு வாசிப்புகளை நிகழ்த்தி வருகிறார்.

# ராஜ்கௌதமன் திறனாய்வு

இலக்கு அமைப்பின் மூலமாகவும் இலக்கிய வெளிவட்டம் மூலமாகவும் படிகள் இதழ் மூலமாகவும் மார்க்சியத் திறனாய்வாளராகத் தெரியவந்தவர்.



- க.அயோத்திதாசர் ஆய்வுகள்
- பாட்டும் தொகையும் பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச சமுக உருவாக்கமும்
- ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும்
- தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு,
- அறம் அதிகாரம்
- தலித்திய விமர்சனக் கட்டுரைகள்
- கண்மூடிவழக்கமெல்லாம் மண்மூடிப்போக.
- கலித்தொகை-பரிபாடல்: ஒரு விளிம்புநிலை நோக்கு.
- ஆரம்பகட்ட முதலாளியமும் தமிழ்ச்சமூக உருவாக்கமும்

விளிம்புநிலை வாசிப்பில் சங்க இலக்கியங்களை வாசித்து சமூக பண்பாட்டு அரசியல் வரலாற்றுக் களங்களைத் தொட்டுப் பயணிக்கும் சிந்தனையாளர்.

# மார்க்சியத் திறனாய்வு

## மொழிபெயர்ப்பு நூல்களின் பங்களிப்பு

மார்க்ஸீய அழகியலின் அடிப்படைகள் – பொன்னீலன்

கலையும் சமுதாய வாழ்க்கையும் – ரா. கிருஷ்ணையா

மார்க்ஸிய அழகியல் ; ஒரு முன்னுரை – சுகுமாரன்

மார்க்சீய இலக்கியக் கொள்கை – அ. மார்க்ஸ்

மார்க்சிய அழகியலைப் புரிந்துகொள்வதற்கு உதவும் நூல்கள் இவை.

# மார்க்சியத் திறனாய்வு

இதழ்களின் பங்களிப்பு

மார்க்சியத் திறனாய்வைத் தமிழ் இலக்கியச் சூழலில் வளர்த்தெடுப்பதில் இதழ்களின் பங்களிப்பு குறிப்படத்தக்கது.

சாந்தி, சரஸ்வதி, தாமரை, செம்மலர், உதயம், மனஓசை, பிரக்ஞை, இலக்கிய வெளிவட்டம், படிகள், இனி, பரிமாணம், புதிய தலைமுறை, நிகழ், விழிகள்

இலங்கையைச் சேர்ந்த எம்.ஏ. நுஃமான் போன்வர்கள் ஞானி, தமிழவன் வழியில் மார்க்சியத் திறனாய்வைச் செழுமைப்படுத்தினார். மார்க்சியமும் தமிழிலக்கியத் திறனாய்வும் என்று ஒரு தனித்துறையே இயங்கவேண்டிய அளவுக்கு தமிழில் மார்க்சியத் திறனாய்வு இயங்குகிறது.

# தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு

அலகு 4

## ஒப்பிலக்கியத் திறனாய்வு

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

07.12.2020

# ஒப்பிலக்கியத் திறனாய்வு

இலக்கியத் திறனாய்வில் ஏதேனும் இரண்டு நூலை ஒப்பிட்டு விளக்குவது ஒப்பிலக்கியத் திறனாய்வு.

ஒப்பீட்டு முறையை, தொல்காப்பியர் தொடங்கி வ.வே.சு.ஐயர் வரை தமிழ் இலக்கிய வரலாற்றில் பலர் பயன்படுத்தியுள்ளனர்.

இவை ஒப்பிலக்கியம் ஆகா.
ஒப்பிட்டு விளக்குவதெல்லாம் ஒப்பிலக்கியங்கள் ஆகா.

# ஒப்பிலக்கியத் திறனாய்வு

ஒப்பிலக்கியத் திறனாய்வு விதிமுறைகள்

1. ஓர் இலக்கியத்துடன் காலம், வகைமை, உள்ளடக்கம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு வழியில் தொடர்புடைய வேறு மொழியிலுள்ள இலக்கியத்தைக் குறிப்பிட்ட ஒப்பிலக்கியக் கோட்பாட்டின் வழி ஆராய்வது ஒப்பிலக்கியம்.

தாக்கக் கோட்பாடு, வகைமைக் கோட்பாடு, அடிக்கருத்துக் கோட்பாடு முதலிய கோட்பாடுகளின் அடிப்படையில் ஆராயப்படவேண்டும். (இணைநிலைக் கோட்பாடு – அமெரிக்கக் கோட்பாடு)

2. இலக்கியத்தைப் பிற நுண்கலைகளுடன் ( இலக்கியமும் ஓவியமும் என்பதுபோல) ஒப்பிட்டு ஆராய்வதும் ஒப்பிலக்கியம் ஆகும்.

# ஒப்பிலக்கியத் திறனாய்வு

ஒப்பிலக்கியத் திறனாய்வு விதிமுறைகள்

3. இலக்கியத்தைப் பிறதுறைகளுடன் (இலக்கியமும் சமூக இயலும், இலக்கியமும் உளவியலும் என்பன போல) ஒப்பிட்டு ஆராய்வதும் ஒப்பிலக்கியம் ஆகும்.

ஒப்பிலக்கியம் - ஓர் அறிமுகம் என்ற வை. ச்ச்சிதானந்த்த்தின் நூல் ஒப்பிலக்கியக் கோட்பாடுகளை விரிவாக விளக்குகிறது.

பல மொழிகள் பேசப்படும் இந்தியச் சூழலில் ஒப்பிலக்கிய ஆய்விற்கு வேடைக்காடாக இந்தியா விளங்க்க்கிறது என்பர்.

# ஒப்பிலக்கியத் திறனாய்வு

ஒப்பிலக்கியத் திறனாய்வுப் பார்வை

விஞ்ஞானப்பூர்வமாக இலக்கியம் பற்றிய விளக்கம் அமையவேண்டும் என்பதால் திறனாய்வு என்ற எல்லையைத் தாண்டி ஆராய்ச்சி என்ற நிலைக்குப் போய்விடுகிறது.

பங்காற்றிய ஆங்கிலப் பேராசிரியர்கள்

வை. சச்சிதானந்தம், ப. மருதநாயகம், க. செல்லப்பன், பாலா, எஸ். இராமகிருண்ணன் முதலியோர்

பங்காற்றிய தமிழ்ப் பேராசிரியர்கள்

தமிழண்ணல், கதிர். மகாதேவன், கி. ராசா, பிச்சை முதலியோர்